# மஹா கும்பாபிஷேக மலர்

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

அக்ஷய வருஷம் தை மீ 20ந் திகதி (2.2.87.)



University of Jaffna
235.405
MAN
P3421(AR; Main)

நூதன ஸ்ரீ பஞ்சமுக விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ பஞ்சமுக விநாயகர்

# மகா கும்பாபிஷேக மலர்



1987

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
அக்ஷய வருஷம் மீ 20 திகதி

2007
235.405 MAN
AR
UNIVERSITY OF JAFFNA LIBRARY
N.A
ARCHIVES
P3421
University of Jaffna
P3421
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Donated by:-
Mr. K. C. KULARATNAM

உ
கணபதி துணை

# மருதடி பஞ்சமுக விநாயகர்
# கும்பாபிஷேக மலர்

## பொருளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சமர்ப்பணம் | 1 |
| 2. | தரும கர்த்தா சபைத் தலைவர் நன்றியுரை | 4 |
| 3. | வழிபடுவோர் சங்கத் தலைவர் நன்றியுரை | 5 |
| 4. | ஆலய தரிசனம் | 6 |
| 5. | பஞ்சமுகவிநாயகர் | 8 |
| 6. | மருதடி | 10 |
| 7. | கும்பாபிஷேகம் | 12 |
| 8. | திருக்கோயில்கள் வேண்டுமா. | 17 |
| 9. | தெய்வம் உண்டென்றிரு | 18 |
| 10. | மருதடி பஞ்சமுக விநாயகருக்குக் குடமுழுக்கு | 20 |
| 11. | பஞ்சமுக விநாயகர் | 21 |
| 12. | மானியம்பதி மருதடி விநாயகர் பதிகம் | 25 |
| 13. | மருதடி விநாயகர் ஆலய வரலாறு | 31 |
| 14. | ஒன்றே கடவுள் | 34 |
| 15. | திருவுருவ அமைப்பும் அதன் சிறப்பும் | 37 |
| 16. | பிதிர் யாகம் | 39 |
| 17. | நிர்மாலியம் | 41 |
| 18. | கோயில் - நித்திய நைமித்திக பூசை - அந்தணர் | 42 |
| 19. | ஞான குரு | 44 |



முதற் பதிப்பு ★ 1987 - 3 - 17
அச்சுப்பதிப்பு ★ பிதா என்றப்பிறையஸ், பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி.
அட்டைப்பதிப்பு ★ புனித வளவன் கத்தோலிக்க அச்சகம்
தொகுப்பு ★ கும்பாபிஷேக மலர் குழு
விலை ★ நன்கொடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# சமர்ப்பணம்

ஆன்ம கோடிகளின் தீவினைகளை அகற்றி இன்னருள் சுரக்கும் விநாயகப் பெருமான் திருவருளால் இந்தப் பஞ்சமுக விநாயகர் கும்பாபிஷேக மலரை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாண்டு தைமாதம் 20 ந் திகதி (20-2-1987) பஞ்சமுக விநாயகப் பிரதிஷ்டை மங்களகரமாக நிகழ்ந்ததைக் கண்டு அடியார்கள் பேரானந்தத்தில் மூழ்கினர். அக்காட்சியைக் கண்டு மகிழ்வுற்ற ஆலய நிர்வாகிகள் இக் கும்பாபிஷேக மலரை வெளியிட நிச்சயித்தனர்.

பஞ்சமுக விநாயகரின் தத்துவங்கள் சிறப்புக்கள் கோயில் வரலாறு சமயக் கருத்துக்கள் முதலியவற்றை மிகக் குறுகிய காலத்துள் எழுதித் தந்த சைவப் பெருமக்களுக்கு நாம் மிகுந்த கடமைப்பாடுடையோம்.

கும்பாபிஷேக விழாவினை நேரில் கண்டு தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்காத பக்தர்கள் பயனடையுமாறு முக்கிய நிகழ்ச்சிகளின் படங்களை இம்மலரில் சேர்த்துள்ளோம். இப்படங்களைத் தமது சொந்தப் பணத்தில் அமைத்துத் தந்த பெயர் குறிப்பிடுவதை விரும்பாத அன்பருக்குச் சைவ நன் மக்களின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

இம்மலரை வெளியிடுவதற்கு வேண்டிய அச்சுச் செலவீனத்தை விநாயக பக்தர் மானிப்பாய் வாசி பொறியியலாளர் திரு ச. க நடராசா அவர்கள் மனமுவந்து உதவினார்கள். அவருடைய வள்ளன்மைக்கு விநாயகப் பெருமானின் திருவருள் எக்காலமும் பாலிப்பதாக.

அட்டைப்பட வேலைகளையும் ஆங்காங்கு காணப்படும் படங்களையும் நல்ல முறையில் ஊதியம் பெறுது செய்து உதவிய நல்லூர் திரு. வி. சுப்பிரமணியம் (தவம்) அவர்களுக்கு எமது நன்றி உரியது.

தர்மகர்த்தா சபையும் வழிபடுவோர் சங்கமும் திருத்தொண்டர் சபையும் ஒருங்கிணைந்து சகல கருமங்களையும் செய்து வந்த மரபிற்கமைய இம்மலரை வெளியிடுவதிலும் ஒன்றுபட்டு நின்று மலர்க்குழுவொன்றை அமைத்து இதனை வெளியிடத்துணை புரிந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

இனிவரும் சந்ததியினருக்கும் பயன்படுமாறு இம்மலர்ப்பிரதிகளை பேணி வைத்திருக்க வேண்டுமென அன்பர்களை வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலருக்கு முதன்மை கொடுத்து மிகச் சுருங்கிய காலத்தில் இதனைத் திறம்பட அச்சிட்டுத் தந்த ஆனைப்பந்தியில் உள்ள பிதா அச்சகத்தாருக்கும் ஊழியர்களுக்கும் மிக்க நன்றியுடையோம்.

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் மேன்மேலும் அருள்புரிந்து உலகெங்கணும் துன்பங்கள் நீங்கி இன்பம் பெருக வேண்டுமென இறைவனை வாயார வாழ்த்தி மனமார வணங்கி திரிகரண சுத்தியோடு இம்மலரை அவரது திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சுபம்

மானிப்பாய்.
18-3-1987

மலர்க்குழுவினர்

---

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி,
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி,
இன்பரசத் தேபருகிப் பலகாலும்,
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே:
தம்பிதனக் காகவனத் தணைவேனே!
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே!
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே!
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
## தருமகர்த்தாக்கள்

திரு. ச. சிவகுருநாதர்
*தலைவர்*

வைத்தியகலாநிதி. பொ. சிவகணேசமுருகமூர்த்தி
*(செயலாளர்)*

திரு. த. சிதம்பர நடராஜா
*(பொருளாளர்)*

திரு. க. தர்மராசா
திரு. சி. பாலரத்தினம்
திரு. மா. கிரிதரன்
திரு. க. சுந்தரலிங்கம்

★ ★ ★

## மலர்க்குழு

திரு. மு. இராமநாதன்
திரு. சி. பாலரத்தினம்
திரு. க. உதயசூரியர்
திரு. க. இராசநாயகம்
திரு. கௌரி காந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## தருமகர்த்தா சபைத் தலைவர்

# திரு. ச. சிவகுருநாதர் அவர்களின்

# நன்றியுரை

நமது வாழ்க்கை மேன்மையடைந்து உய்தி பெறுவதற்குக் கடவுள் அருள் இன்றியமையாதது. இறைவன் ஒருவராயிருந்தும் அவர் பல மூர்த்தங்களைக் கொண்டிருக்கின்றார். அவற்றுள் விநாயகப்பெருமான் எனப்படும் திருமூர்த்தி மிகுந்த சிறப்புடையது.

எண்ணிறைந்த பக்தர்களின் எண்ணம் இப்போது நிறைவெய்தியது. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகப் பிரதிஷ்டை செய்து நிறைவெய்தியது பக்தர்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. வைதீக சைவ நெறியை நன்குணர்ந்த மந்திர சித்தி கைவந்த அந்தண சிரேஷ்டர்களால் மகா கும்பாபிஷேகமும் அதனைத்தொடர்ந்து 45 நாள் அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனையும் நியமந்தவறுது நடைபெற்று வருகின்றன. இந்த அரும்பெரும் திருப்பணி முடிபெய்தும் தினத்தில் பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க இம்மலரை வெளியிடுகின்றோம்.

பஞ்சமுக விநாயக மூர்த்தியை இக்கோயிலில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் பக்தர்களின் உள்ளத்தில் தோன்றியநாள் முதலாக அது நிறைவெய்தும் வரை வேண்டிய ஆலோசனைகளைக் கூறியும் மகா கும்பாபிஷேகத்தையும் செய்து முடித்த நவாலியூர் பிரதிஷ்டா சிரோன்மணி பிரம ஸ்ரீ சாமி விசுவநாதக்குருக்கள் அவர்களுக்குச் சைவசமய அன்பர்கள் அனைவரின் சார்பிலும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். கும்பாபிசேகம் சிறப்புற அயராது உழைத்த ஆலய பிரதம குரு மற்றும் உதவிக் குருக்கள்மார் தொண்டாதிகள் அனைவருக்கும் எமது நன்றி. இப்போது கோண்டாவிலைத் தனது உறைவிடமாகக் கொண்ட விசுவ கர்மாஸ்தபதி ஸ்ரீ நா. சோமசுந்தரம் ஸ்தபதி அவர்கள் தெய்வ அம்சங்கள் அமையும்படி பஞ்சமுக விநாயகரின் திருவுருவத்தைத் திறம்பட அமைத்துத் தந்தார்கள் அவருக்கு எமது நல்லாசிகளும் நன்றியறிதலும் எக்காலமும் உரியன, இம்மலரில் பெயர் குறிப்பிடாத மெய்யன்பர்கள் பலர் இத்திருப்பணி நிறைவெய்துவதற்குத் தம்மால் ஆவனசெய்து துணை புரிந்தார்கள். அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி உரியது. எல்லாவற்றையும் இடையூறின்றி இனிது நிறைவெய்தும்படி அருள் புரிந்த விநாயகப்பெருமானின் திருவடிகளை எல்லோரும் தியானிப்போமாக.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மருதடி விநாயகர் துணை

## வழிபடுவோர் சங்கத் தலைவர்

## திரு. அ. நாகராசா அவர்களின்

# நன்றியுரை

சிவநெறி வழிபாட்டில் விநாயகர் பெருமான் முக்கிய இடம்பெற்றிருக்கக் காண்கின்றோம். விநாயகர் என்னும் திருநாமம் தனக்கு மேலாக வேறொரு தலைவன் இல்லாதவர் என்னும் பொருளை உடையது. திருக்கோவில்களிலும் இல்லங்களிலும் பிற இடங்களிலும் நிகழும் சுப காரியங்கள் விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றன. இதுவே ஆன்றோர் மரபு

இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த விநாயகப் பெருமான் மானிப்பாய் மருதடி விநாயகராகக் கோயில் கொண்டிருந்தது பக்த கோடிகள் மெய்யன்போடு வழிபடுதற்கு உரிய புண்ணிய ஸ்தலமாக விளங்குவது மானிப்பாய் கோவிற்பற்றைச் சேர்ந்த சைவ நன்மக்கள் செய்த அருந்தவப்பயனேயாம்.

இத்திருக்கோயிலில் பஞ்சமுக விநாயகப் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று எண்ணிய பக்தர்களின் எண்ணம் இப்போது நிறைவெய்தியது மட்டற்ற மகிழ்ச்சிக்குரிய தெய்வ கைங்கர்யமாகும். இதனை மிக்க சிறப்புடன் நிறைவெய்துவதற்கு ஆவன செய்து உதவிய அன்பர்கள் அனைவருக்கும் வழிபடுவோர் சங்கம் சார்பாக எனது பாராட்டுக்கள் உரியன.

இன்னும் வேண்டிய பல திருப்பணிகளைச் செய்து இப்புண்ணிய ஸ்தலம் மேலும் மேலும் சிறப்புற்று விளங்கும்படி அருள்புரிய வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவடிகளைத் திரிகரண சுத்தியுடன் தியானிப்போமாக.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயதரிசனம்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

யாவரும் நாடோறும் திருக்கோயிலிற் சென்று, சிரத்தையோடு விதிப்படி கடவுளைத் தரிசனஞ்செய்தல் வேண்டும். ஆலயதரிசனம் நாடோறுஞ் செய்தற்கு இயலாதாயின் புண்ணியகாலங்களிலேனும் தவறுமற் செய்தல் வேண்டும்.

ஆலயதரிசனஞ் செய்ய விரும்புவோர் ஆலயத்துக்குச் சமீபத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, அநுட்டானம் முடித்துக்கொண்டு, ஆலயத்துக்குப் போதல்வேண்டும்.

ஆலயத்துக்குப் போகும்பொழுது, ஒரு பாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை முதலியவை வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு, போதல்வேண்டும். இவைகளுக்குப் பொருளில்லாதவர் பத்திரபுஷ்பங்களேனுங் கொண்டுபோய்க் கொடுத்து வணங்கல்வேண்டும். அதுவுங் கூடாதவர் சந்நிதியினுள்ள செத்தை முதலியவற்றைப் போக்கியேனும் வணங்கல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே, திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், பண்ணல்வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்தல்.

நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டுதரமாயினும், பண்ணல்வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டல்வேண்டும். கிழக்கேயாயினும், வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது.

கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசைவைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, கடவுளை மறவாத சிந்தையோடு இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்துக்கொண்டு, கால்களை மெல்லவைத்துப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும் ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டுதரமும், பார்வதிதேவியாரையும் விட்டுணுவையும் நந்நான்குதரமும், பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும்.

பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே தூபி நிழலேனும் துசத்தம்பநிழலேனும் இருந்தால், அந்த நிழலில் மூன்று கூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லல் வேண்டும். கடவுள் உற்சவங் கொண்டருளும்பொழுது அந்த நிழல் இருப்பினும், நீங்காது செல்லலாம்.

அபிஷேககாலத்தில் உட்பிராகாரத்திலே பிரதக்ஷிணம் நமஸ்கார முதலானவை பண்ணலாகாது.

பிரதக்ஷிணம் பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரம் செய்து, எழுந்து கும்பிட்டுக்கொண்டு உள்ளேபோய், கடவுளைத் தரிசித்து, மனசிலே தியானித்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, மனங்கசிந்துருக, உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்தவருவி சொரிய இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லவேண்டும்.

அருச்சகரைக்கொண்டு கடவுளுக்கு அருச்சனை செய்வித்து, தேங்காய் பழமுதலியவற்றை நிவேதிப்பித்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணுவித்து, அருச்சகருக்கு இயன்ற தக்ஷிணை கொடுத்தல்வேண்டும்.

கடவுளைத் தரிசனஞ் செய்துகொண்டு, அவருக்குப் புறங்காட்டாது பலிபீடத்துக்கு இப்பால் வந்து மூன்று தரம் நமஸ்கரித்து, எழுந்து, வடக்குநோக்கி இருந்து, கடவுளைத் தியானித்துக்கொண்டு, அவருடைய மந்திரத்தில் இயன்ற உருச்செபித்து, எழுந்து வீட்டுக்குப் போதல்வேண்டும்.

திருக்கோயிலிலே செய்யலாகாத குற்றங்களாவன ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், சனனசௌச மரணசௌசத்தோடு போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், அபானவாயுவிடுதல், பாக்கு வெற்றிலையுண்டல், தம்பலமுமிழ்தல், போசனபானம், பண்ணுதல், நித்திரை செய்தல், மயிர்கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வேட்டி கட்டிக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயமிட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், வாகனமேறிச்செல்லுதல், குடைபிடித்துக் கொள்ளுதல், பாதரக்ஷையிட்டுக்கொள்ளுதல், உயர்ந்த தானத்திருத்தல், ஆசனத்திருத்தல் தூபி துசத்தம்பம் பலிபீடம் விக்கிரகம் என்னும் இவைகளின் சாயையை மிதித்தல், விக்கிரகத்தையும் நிர்மாலியத்தையும் தீண்டுதல், பெண்களைத் தீண்டல், பெண்களை இச்சித்துப்பார்த்தல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம்வருதல், ஓடி வலம்வருதல், கடவுளுக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கேபோதல், அகாலத்திலே, தரிசித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், வீணகீதம்பாடல், வீண்கீதம் கேட்டல், திருவிளக்கவியக்கண்டும்தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாதபோது வணங்குதல், உற்சவங்கொண்டருளும் பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல் முதலானவைகளாம். இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர் கடவுளுடைய மந்திரத்தைச் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் விழுந்து வருந்துவர்கள் அவருக்குப் பிராயச்சித்தமில்லை.

திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியர்களல்லாத சாதியார்கள் திருக்கோயிற் புறத்திலே பிரதக்ஷிணம் பண்ணித் திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத் தோத்திரஞ் செய்யக்கடவர்கள்.

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பஞ்சமுக விநாயகர்

பிரதிஷ்டா சிரோமணி
பிரமஸ்ரீ சாமி விசுவநாத் குருக்கள்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தும் இறைவனின் அருட்செயல்கள். ஆன்மாக்களைப் பிணித்துள்ள பாசத்தளையினின்றும் நீக்கிப் பேரின்பப் பேறு நல்கும் பொருட்டு இந்த ஐந்தொழில்களும் இடையீடின்றி நிகழ்கின்றன.

மனிதப் பிறவி கிடைத்தற்கரியது. சமய நூல்களில் விதித்தன செய்யவும், விலக்கியன தவிர்க்கவும் ஆறறிவுடைய மக்களுயிர்க்கே முடியும். சமய ஒழுக்க நெறியில் முதன்மையானது இறைவனைப் பக்தி சிரத்தையோடு அநுதினமும் நியமந் தவறாது வழிபடுதல்.

ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாத இறைவனைச் சிவம் என்றும் விநாயகர் என்றும் முருகன் என்றும் இன்னும் பல மூர்த்திகளாக அமைத்து வழிபடுகின்றோம். எல்லாத் திருக் கோயில்களிலும் முதலில் விநாயக பூசை நிகழ்ந்த பின்பு ஏனைய மூர்த்திகளுக்குப் பூசை நிகழ்வதைக் கொண்டு விநாயக வழிபாட்டின் பெருமையை அறியலாம். விநாயகர் என்பதற்கு மேலான நாயகர் [தலைவர்] இல்லாதவர் என்பது பொருள்.

எல்லாக் காரியங்களையும் இடையூறின்றி இனிது முடிக்க வல்ல விநாயகப் பெருமானுக்கு உரிய மூர்த்தங்கள் 16 எனவும் 32 எனவும் நூல்கள் கூறுகின்றன. இவற்றின் விரிவை விநாயக புராணம் விநாயக பராக்கிரமம் ஆகிய நூல்களில் பரக்கக் காணலாம். அவற்றை இங்கே விரிப்பிற் பெருகும்.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கி நான்கு முகங்களும் இவற்றின் நடுவே உச்சியில் ஊர்த்துவம் என ஒரு முகமும் கொண்ட மூர்த்தி பஞ்சமுக விநாயகர் எனப்படும். இத் திருமுகங்கள் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் எனப் பெயருடையவை என்றும் இவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீப ஆராதனை.




விபூதி அபிஷேகம்.

# கும்பாபிஷேகக் காட்சிகள்



சோ. கெங்காதரன் ஸ்தபதி



நா.சோமசுந்தர ஸ்தபதியும், அவர் பேரன்
கெ. மகேஸ்வரனும்.

படங்கள்:- மூ. அமரலிங்கன்-நவாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருத்தியங்களை ஆன்மாக்கள் உய்தியடையும் பொருட்டுச் செய்கின்றன என்றும் சைவ சமய நூல்கள் கூறுகின்றன. இதனால் பஞ்சமுக விநாயகர் எனப்படும் திருவுருவத்தின் மேன்மை அறியப்படும்.

ஒரு திருக் கோயிலில் மூர்த்திகளை அமைக்கும் போது அக் கோயிலின் அமைப்பு அதன் கர்ப்பக்கிருகத்தில் உள்ள திருவுருவத்தின் அமைப்பு கிராமப் பொருத்தம் என்பவற்றுக்கு ஏற்ப அவைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். என்பது நியமம். மூர்த்திகள் சிரசு முதல் பாதம் வரை விஸ்வகன்மீயம், மானசாரம் முதலிய சிற்ப சாஸ்திர விதிகளுக்கு ஏற்பத் தேவாம்சம் உடையனவாக அமைதல் வேண்டும்.

இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலங்களுள் மானிப்பாயில் உள்ள மருதடி விநாயகர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்த ஒரு திருக்கோயில். இப் பெருமானின் பேரருள் நிறைவைத்தரிசித்து உய்தி பெற்றோர் அளப்பலர்.

விநாயகப் பெருமானின் திருவருளால் சைவ நன்மக்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யத் தங்கம் முதலிய லோகங்களால் சாஸ்திர விதிப்படி பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் அமைக்கப் பெற்று அதனை இவ்வாண்டு தை மாசம் 20-ந் திகதி உத்தரட்டாதி நட்சத்திர தினத்தில் வேதாகம விதிப்படி மந்திர சித்தி வல்ல அந்தணர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 45 தினங்கள் அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனைகளும் நியமந் தவறாது நிகழ்ந்து வருகின்றன. தர்மகர்த்தா சபையினரும் வழிபடுவோர் சபையினரும் சைவாபிமானிகளும் இத் திருப்பணியைத் திருவருள் கைகூட்டச் செய்து முடித்தார்கள்.

இப் புனித தெய்வ கைங்கர்யத்தை நிறைவு பெறச் செய்த விநாயகப் பெருமானின் பேரருள் எங்கும் நிறைந்து பொலிவுற்று இடர் களைந்து இன்பம் பெருகி ஆன்மாக்கள் உய்தி பெறும் பொருட்டு எல்லாம் வல்ல பஞ்சமுக விநாயகப் பெருமானின் திருவடிகளை மெய்யன்போடு வழிபடுவோமாக.

- சுபம் -

**
**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதடி

**பிரமஸ்ரீ சோ சந்திரகாந்தக் குருக்கள்**
**[ஆலய பிரதம குருக்கள்]**

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம் மூன்றும் ஒருங்கே அமைந்தால் ஓர் ஆலயத்திற்கு சிறப்பாகும். மூர்த்தி- விநாயகர், தலம்-மருது, தீர்த்தம் அமிர்தபுஸ்கரணி இவை அமைந்த இடம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். சில ஊர்களுக்கு அந்தந்த இடத்தின் ஆலயத்தால் பெருமை. உதாரணமாக இந்தியாவில் மதுரை என்றால் மீனாட்சி. சிதம்பரம் என்றால் நடராஜர். அதேபோல மானிப்பாய் என்றால் மருதடி விநாயகர்.

தனக்குமேல் நாயகன் இல்லாதவன் விநாயகன். பூதகணங்களுக்கு அதிபதி கணபதி "சத்"தும் "சித்"தும் கூடிய காலத்தில் ஆனந்தம். சத். சிவம். சிவம்- சக்தி இந்த ஆனந்தமூர்த்தியே கணபதி. சாதாரணமாக ஆனந்தம் நீடித்து நிலைக்காது. இது அழியாமல் இருக்கவே "சத்". அறிவோடு கூடிய நிரந்தர ஆனந்தமே சச்சிதானந்தம்.

இப்பூவுலகில் பஞ்ச கோசங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

அன்னகோசம் - அதிபதி விஷ்ணு
பிராணகோசம் – அதிபதி பரமேஸ்வரன்
மனோமயகோசம் - அதிபதி சக்தி
விஞ்ஞானமயகோசம் - அதிபதி சூரியன்
ஆனந்தமயகோசம் - அதிபதி விநாயகர்

ஆனந்தம் வேண்டுபவர் விநாயகரை வழிபடவேண்டும். விநாயகர் வீற்றிருக்குமிடம் ஆனந்த புவனம். அவனின் உருவமோ ஓங்காரவடிவம் ஒருமைப்பாடு என்ற உயர்ந்த உட்பொருள் தத்துவத்தை விளக்குவதே இந்த ஓங்காரவடிவம்.

வாழ்க்கைக்கு ஆண் - பெண் இணைப்பு அவசியம். விநாயகமூர்த்தம் இதனை உணர்த்துகிறது. தந்தமுள்ள பகுதி ஆண்கூறு. தந்தமற்ற பகுதி பெண்கூறு. மேலும் புலால் மறுத்தலின் அவசியத்தையும் சைவஉணவின் மேன்மையையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துகிறது. அளவிடற்கரிய சக்தியுள்ள யானை உண்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவர உணவுதான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஐந் தொழிலும் ஒருகுறைவுமில்லாமல் நடை பெறவேண்டும். என்பதைக் கணபதியின் ஐந்து கரங்கள் குறிக்கின்றன.

இவர் ஆனந்தமயமானவர். ஞானமேவடிவானர். இவருக்கு அருகம்புல் மிக உகந்தது. அருகு ஒரு இடத்தில் முளைத்து ஆறு இடத்தில் கிளைக்கும்தன்மையுடையது. அருகு போல் வேரூன்றி என்பது பழமொழி. இந்த அருகை அர்ச்சித்தால் மூலாதாரத்தில் விளங்கும் விநாயகர் ஆறு ஆதாரங்களில் நம்மைப் பொருந்தச் செய்வார், அத்துடன் வன்னிப்பத்திரம் விநாயகருக்கு உகந்தது.

எம்பெருமானாகிய மருதடிவிநாயகர் மூலஸ்தானத்திலே ஆகுவாகனனாகக் காட்சி தருகின்றார். இந்த ஊர்மக்களையல்ல அயலூர் அதற்கு அப்பால் உள்ள ஊர்மக்களையும் தன்பால் கவர்ந்து ஈர்க்கின்றார். கவலையுடன்வரும் மக்களை ஆனந்தபுவனத்திலிருந்துகொண்டு ஆனந்தமாக்குகிறார்.

இவருக்கு 18 நாட்கள் மஹா உற்சவம் நடைபெறுகின்றது. இவர் 18 த்லீபங்களுக்கு அதிபதி. 18 புராணங்களை வகுத்தவர். 18 ஒவிதிகளைப் படைத்தவர். 18 ஸ்மிருதிகளின் வடிவினன். 18 எழுத்துக்களின் தனிக் கூட்டு. அறிவில் சமர்த்தர். 1, 5, 9ம் இடத்தில் தோஷமுள்ளவர்கள் விநாயகரை வழிபட்டால் நன்மையடையலாம். இதனால் தான்போலும் இவருக்கு 18 தினங்கள் மஹோற்சவம். புதுவருடப் பிறப்பன்று இரதோற்சவம். இது ஓர் தனிச்சிறப்பு.

இத்தனை சிறப்பு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு மருத மர நிழலிலே அடியவர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டு இருக்கும் சிததிவிநாயகர் ஆலயத்தில் புதிதாக பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கின்ற பஞ்சமுக விநாயகப்பெருமான் தனது ஈசானம், தற்புருஷம், அகோரகிருதம், வாமதேவம், சத்தியோயாதம் ஆகிய ஐந்து முகங்களினாலும் அருள்பொழிகின்றார். இந்த ஆலயம் மேற்கு நோக்கியுள்ளது. மேற்கு முகம் சத்தியோயாதமுகம். இது அனுக்கிரகமுகம். இது எல்லாவற்றையும் விட சிறப்பாகும். மேற்கு நோக்கி அனுக்கிரக முகமாகவே காட்சிகொடுத்து அம்மை அப்பன் தில்லைக்கூத்தன் இவர்களுடன் தம்பியாகிய சுப்பிரமணியருடனும் நவக்கிரக நாயகர்களுடனும் கொலுவீற்றிருக்கும் மருதடியின் நிழலிலே அமர்ந்திருக்கும் கணபதியின் தாழ்பணிந்து பக்தர்களுக்கு என்றென்றும் அருள்புரிய வேண்டும் என்று விழைகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

✱



Donated by:-
Mr. K. C. ... RATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

திரு. கா. கைலாசநாதக் குருக்கள், *M. A., Ph. D.*
சமஸ்கிருத விரிவுரையாளர்,
தலைவர் [இந்து நாகரிகத்துறை]
இலங்கைப் பல்கலைக்கழகம்.

*பிரதிட்டை என்றால் என்ன? இக்கிரியையில் யாகசாலை எதற்காக? கும்பங்கள் எதற்காக? குண்டங்கள் அமைத்துத் தீ வளர்ப்பது யாது காரணம் பற்றி? நேரே திருவுருவிலேயே இறைவனைத் தோற்ற வைக்காது கும்பம், குண்டங்கள் முதலிய உபாயங்களைக் கையாளும் நோக்கந்தான் யாது? என்ற கேள்விகளுக்கு உரியவாறு விடை கூறும் முகமாகக் கும்பாபிஷேகக் கிரியை யமைப்பையும் அடிப்படைத் தத்துவத்தையும் சுருக்கி அறியத்தருவது இக் கட்டுரை.*

எங்கும் நிறைந்தவன் இறைவன். அவ்வாறிருந்தும் அவனைத் தரிசித்தல் வேண்டிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கோவிலையே நாடிச் செல்கின்றனர் இதனால் 'அவன் எங்கும் உளன்' என்ற சிறப்புக் குன்றுமோ வெனின், ஒரு பொழுதும் குன்றாது. சிக்கலான இக் கேள்விக்குத் தெளிவான விடை பகருகின்றது சிவஞான சித்தியார் [12 - 3 - 4]. பசுவின் உடலெங்கணும் பால் பரந்து கவறியுள்ளது. எனினும் அது மூலைகளின் வழியே தான் வெளியேறுகின்றது. அதே போன்று எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் குறிப்பிட்ட இடத்திலேயே சிறப்பாக வெளிப்போந்து அருள் சுரப்பான். இவ்வாறு அருள் பெருக்குமிடம் குருலிங்க சங்கமமெனச் சமய நூல்கள் கூறும். இம் மூன்றினுள் இலிங்கத்தில் இறைவன் தோற்றியருளுதலையே ஆலய வழிபாட்டில் நாம் உணருகின்றோம்.

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள் பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவலிங்கம் எனவும் படலாயிற்று. பரம் பொருளானான சிவபிரானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம். 'அப்பரமன் இத்தகையன்' என எமக்கு விளக்கி நிற்கின்றது. அவ் விளக்கத்தின் சுருக்கம்: "உருவமில்லாத எம்பெருமானை எவ்வாறு கிரகிப்போம், என ஏங்கி அலமந்து நிற்பார்க்கு உருவங் காட்டியும், 'எம் போன்று உருவம் வாய்ந்தவன் இவன்' எனத் தற்பெருமை தோன்ற இறுமாந்து நோக்குவார்க்குக் கை கால் முதலிய உறுப்புகளைத் தெளிவாகப் பெறாத அருவநிலையில் தோற்றியும் அருவுருவமாக விளங்குவது இலிங்கத் திருமேனி" என்பதாம். இத்துணைப் பெருமை வாய்ந்த இலிங்கத் திருமேனி அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய்ப் பரமன் விளங்கும் உயர் தத்துவத்தை உணர்த்துவது. சிவபிரானுக்கு உரித்தான இச் சிவலிங்கத் திருமேனி இல்லாத கோவில் கோவிலாகாது. அரசன் இல்லாத நாடு போன்றதே இலிங்கத் திருவுருவமில்லாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் தண்டிகையில்
வெளிவீதி வரும் காட்சி.




பிரதம கும்ப அபிஷேகம் நிறைவேறுகிறது.

# கும்பாபிஷேகக் காட்சிகள்



குங்கும அபிஷேகம்.



பஞ்சாமிர்த அபிஷேகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில். பாரத நாட்டில் ஆகம முறைப்படி அமைந்த கோவில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாத கோவிலைக் காணலரிது. கோவில்களில் எல்லாம் இறைவன் தம்மைச் சுட்டும் அடையாளமான இலிங்க மூர்த்தியாகிக் கருவறையில் மூல விக்கிரகமாய் முதன்மை பெற்று எழுந்தருளுகின்றான். சிவபிரானுக்கல்லாது ஏனைய மூர்த்திகளுக்கு நிறுவப்படும் மூல விக்கிரகம் அருவுருவமான இலிங்க வடிவில் அமையாததாய் உருவ நிலையிலேயே உபாயமாக நிறுவப்படுதல் உபசார வழக்கு.

பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரமனை, பால்கறப்பவன் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று, எவ்வாறு குறிப்பிட்ட ஓரிடத்தில் வெளிப்படுத்துவது? இவ்வாறு வெளிப்படுத்தும் வழிகளையே ஆகமங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. வெளிப்படுத்தும் இவ்வரிய நிகழ்ச்சியை நிகழ்த்துபவனே அருச்சகன். கல்லில் வடிக்கப்பட்ட வடிவத்தில் ஆகமங் கூறும் வழியைக் கடைப்பிடித்தே இறைவனை எழுந்தருளச் செய்கின்றான். இது நிகழு மாற்றைச் சிறிது விரிவாக நோக்குவதற்கு முன் பிரபஞ்ச அமைப்பைச் சற்று நுணுகி அவதானித்தல் பயன்தரும். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களனைத்தையும் எட்டுப் பிரிவுகளுள் அடக்கலாம். இவற்றிற்குப் புறம்பாய பொருளொன்று உண்டு என்றால், அது இவையெட்டும் ஒருங்கு ஒன்று சேரும் வண்ணம் அருளுருவம் தாங்கும் இறைவனே ஆகும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப் படும் ஐந்து பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும், சந்திரனும், இவ்வேழனின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இப்பிரிவுகள். பிரபஞ்சம் முழுவதும் இறைவன் நிறைந்து நிற்பன் ஆதலால் இப்பிரபஞ்சத்தின் கூறுகளான இவ்வெட்டுப் பொருள்களிலும் இறைவனை உணருகின்றோம். இவ்வெட்டு அம்சங்களையுமுடைய பரமன் இதுபற்றி அட்டமூர்த்தி எனச் சிறப்புப் பெற்றவன். எனவே, இவ்வெட்டு அம்சங்களில் நிகழ்த்தும் வழிபாடு அவனது வழிபாடு ஆகும். இவ்வம்சங்களில் இறைவன் எழுந்தருளலைக் காணல் அவனைக் காணலேயாகும். இவ்வடிப்படையிலேதான் சிவாசாரியர் இறைவனைச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுவித்து அங்கு என்றும் சாந்நித்தியமாக விளங்கும்படி செயலாற்றுகின்றார். இவ்வாறு நிகழும் கிரியையே பிரதிட்டை எனப்படும்.

பிர என்னும் பகுதிக்குச் சிறப்பாக என்றும், நன்கு புலனாகும்படி என்றும் திஷ்ட என்னும் பகுதிக்கு நிற்றல் என்றும் பொருள் உண்டு. எனவே, பிரதிஷ்டை என்னுஞ் சொல் 'ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக நிலை நிற்றல்' என்றும், ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிலை நிற்றல்' என்றும் பொருள்பெறும். இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பிரதிட்டை என்னுங் கிரியை கும்பாபிஷேகம் என்னும் மறுபெயரால் வழங்கி வருகின்றது இச்சொல் பிரதிட்டை என்னுஞ் சொல்போலக் கிரியையின் விளைவைச் சுட்டாது கிரியையின் ஓரமைப்பாகிய முழுக் காட்டுதலை மட்டும் குறித்து நிற்கின்றது. பிரதிட்டை என்னுங் கிரியையில் குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இலிங்கத் திருமேனிக்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிகரமான அம்சம். சிகரமான இக்கும்பாபிஷேகமே,—குடமுழுக்கே— பிரதிட்டையே, இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யுஞ் செயலைச் சுட்டுகின்றது.

ஆகமங்கள் கூறும் இவ்வுபாயத்தினை, குடநீரால் முழுக்காட்டல் மூலம் இறைவனை எழுந்தருளி நிலை நிறுத்தும் முறையின் சிறப்பினை, வேதாகமங்களைத் துணைகொண்டு நோக்குமிடத்து, இக்கிரியை முறையின் சிறப்பும் உயர் தத்துவமும் புலனாகும். அதைச் சற்று நுணுகி நோக்குவோம்.

எங்கும் நிறைந்த இறைவன், புலன்களால் கிரகிக்கப்படாத பெருமான், எமக்கிரங்கி, திருவருள் பாலித்துப் படிப்படியாக எங்கட்குப் புலனாகிக் கிட்டும் முறையை உபநிடதங்கள் எடுத்துரைக்கின்றன. இதைத் துணையாகக் கொண்டு வகுத்தமைக்கப்பட்டுள்ளது பிரதிட்டை என்னும் கும்பாபிஷேகக் கிரியையாகும். சர்வவியாபி எனச் சுவேதாசுவதரங் கூறும் பகவான் முதலில் சிறு அளவில் மட்டுமே புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் இந்திரியங்களால் செவ்விதாகக் கிரகிக்கப்படாமையால் வாயுவாகச் சற்று விரிகின்றான். ஆகாயத்திலும் பார்க்க வாயு சிறிது அதிகமாக உணரப்படக் கூடியதெனினும் அது கண்ணால் காண்பதற்கு அரிதான தொன்று அன்றோ! இதை அடுத்த நிலை அக்கினியாக விரிந்த நிலை. இது கட் புலனாவதே. இது தூய்மை பெருக்கி எமமை ஈடேற்ற வல்லது அக்கினியைப் பெரிதும் நெருங்கிப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாக வழிபடுதலில் இன்னல்கள் பல உள. இவ்வின்னல்கள் எதுவும் இல்லாது தானே எல்லாமாய் விளங்குவது நீர். என்றாலும், கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுதல் எளிதன்று. இதுகாறும் கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவது பொருளாகிய மண். இதனிடத்து இறைவனை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு நன்கு கைகூடவல்ல நிலை. இவ்வாறு இறைவன் அருவநிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் நுண்மை அகன்று படிப்படியாகப் பருமை வளரும் வகையில் விரிந்து விளங்குகின்றான். இதை தைத்திரிய உபநிடதம்.

> "ப்ரம்ஹண ஆகாச: ஸம்பூத:
> ஆகாசாத் வாயு:
> வாயோ ரக்நி:
> அக்நே ராப:
> அத்ப்ய: பிருத்வீ"

என எடுத்தியப்புகின்றது.

இறைவனை முற்றிலும் புலனாகா நிலையிலிருந்து, பால் கறப்பவன் பசுவுடலெங்கணும் பரந்து சுவறிய பாலை முலைகளில் வெளிப்படச் செய்வது போன்று, விக்கிரகத்தில் வெளிப்பட வைப்பதற்காக, இதுகாறும் கூறிய விரிவு முறை வழி நின்று, விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்துங் கிரியைகளே கும்பாபிஷேகப் பெருங்கிரியையின் அம்சங்களாய் விளங்கக் காண்கின்றோம். ஆகாய வெளியிலமைவது யாகசாலை. அங்கு வளர்க்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கிநியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயும் குண்டங்களில் ஒருங்கு உறையக் காண்கின்றோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். இவை நான்கிலும் புலனாகாது எங்கும் பரந்து நின்ற இறைவனைக் கிரியைகள் மூலம் படிப்படியாக வெளியாக்கிப் புலனாக வைத்தலே யாகசாலையில் நிகழும் கும்பாபிஷேகக் கிரியையாகும். இக்கிரியையிலே, யாகசாலையில் குண்டங்களில் வளருந் தீயில் இறைவன் தோற்றமடைப்பிக்கப் பெறுகின்றான். மேடையில் நிறுவப்பட்ட கும்பங்களின் நீரிலும் கிரியைகளின் சிறப்பினால் மேலும் வெளிப்படுகின்றான். இவ்வாறு வெளிபடும் நிகழ்ச்சி இறுதியில் மண் அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் வந்து முடிவெய்துகின்றது. முன்னர்க் கூறிய எட்டு அம்சங்களுக்காகத் தனித் தனியே அமைக்கப்பட்ட குண்டங்களில் சாந்நித்தியமானவனை, நீா நிறைந்த கும்பத்தில் வெளிப்பட்டு நிற்கும் அவனை, மண் இயல்பு வாய்ந்த விக்கிரகத்தில் ஒடுக்கி அங்கேயே நிலைபெறச் செய்த பின்னரே, அவன் அவ்விக்கிரகத்தில் பாரெங்கணும் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக வெளிப்பட்டு பிரதிட்டிக்கப்பட்டவனாய் விளங்குகின்றான். இதுபற்றியே, அறவே கிரகித்தற்கரிய இறைமையை, எளிதில் கிரகித்தற்கு முடியாதவாறு ஆகாயம் நுண்ணிதாயிருத்தல் பற்றி, முதன்முதல் புலனை ஆகாயத்தில் நிறுத்தி வழிபடுவதற்கு வகையறியாராய், அதையடுத்து, கட்புலனாகாத வாயுவிலும் பொருத்தி வழிபடும் ஆற்றல் அற்றவராய், புலனாகித் தோற்றும் தன்மையனாயும், ஓரோவழிப் புலனாகாது திடீரென மறைந்துவிடும் இயல்பினாயும் விளங்கும் அக்கினியிலும் நிறுவி வழிபடுதலில் திருப்தி காணாதவராய், வற்றும் இயல்பு காரணமாக என்றும் தொடர்ந்து நிலை பெறாத—எனவே பிரதிட்டைக்கு ஏற்றவாறு பொருந்தாத-நிலையினதாதல் பற்றி, நீரிலும் இறைவனைத் தாபித்து வழிபடும் வாய்ப்புப் பெறாதவராய், மண்ணிலேயே இறைவனை நிரந்தரமாக நிறுவி வழிபடும் ஒரே வழியைக் கடைப்பிடிக்கும் நிலையுற்றோம். எனவே, என்றும் வெளிப்பட்டுப் புலனாகி விளங்கும் வண்ணம் இறைவனை நிறுத்திப் பிரதிட்டை செய்யும் பொருட்டுத் திருக்கோவிலில் நிறுவுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் திருவுருவங்கள் மண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இவ்விக்கிரகங்களிற் சில மண்ணோடு உறவு கொண்ட மலைகளில் பிளந்தெடுத்த கருங்கல்லில் சமைக்கப்படுவன. சில மண்ணிலே அகழ்ந்தெடுக்கப்படும் ஐவகை உலோகங்களில் வடிக்கப்படுவன. சில மண்ணிலே வளரும் மரங்களிற் செதுக்கப்படுவன. இன்னுஞ் சில மண் சுண்ணாம்பு முதலியன கலந்த சுதையால் அமைவன. இவ்வாறு மண்ணின் அம்சத்தை மட்டுமே கொண்டு அமையும் விக்கிரகத்தை நிறுவி அதிலே இறைவனைக் குடிபுகுத்திச் சிறப்பாகத் தோற்றி விளங்கவைக்குங் கிரியையில் தோற்றுவித்தலை நேரே விக்கிரகத்திலேயே நிகழ்த்துதலை விடுத்து, அவன் படிப்படியாக வெளிப்படும் முறையே இலகுவான வழியென உணர்ந்து, அதையே உபாயமாகக் கையாண்டு, இதுகாறும் சுட்டப்பட்ட விண், வாயு, தீ, நீர் ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டு இறைவனைப் படிப்படியாக அவற்றினூடே விக்கிரகத்தில் சுலபமாக எழுந்தருளுவிக்கும் கும்பாபிஷேகப் பெருங் கிரியையில், ஆகாய ரூபமான யாகசாலையிலும், குண்டங்களில் எரி வளரக் காரணமாக்கி நின்று அக்கினியினின்றும் வேறுபடாது இணைந்து நிற்கும் வாயுவிலும் அங்கு வளரும் அக்கினியிலும், மேடையில் அமைக்கப்பட்ட கும்ப நீரிலும் இறைவனைப் பாரனைத்தையும் கடந்து நிற்கும் துவாசதாந்தத்தில் இருந்து இழிந்து வந்து தோற்றம் பெறுமாறு எழுந்தருளச் செய்து. ஆவாகித்து பூசனை புரிந்து, இத்தோற்றம் முழுவதையும் கிரியை முடிவில் மண் இயல்பினதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவத்தில் ஒடுக்கி அங்கு நிலைபெற வைத்து, இவ்வொடுக்கம் நிறைவுறக் கும்ப நீரால் விக்கிரகத்தை முழுக்காட்டுவதன் மூலம் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் சிவாசாரியார் எங்கும் பரந்த இறைவனின் வியாபகத்தினை, பசுவின் முலைகளில் பால் வெளிப்படுவது போன்று திருவுருவத்தில் வெளிப்படும் வண்ணம் ஒருமுகப்பட்டு உறைந்து நிறைந்து விளங்கச் செய்கின்றார்.

கும்பாபிஷேகம் என்னும் இக்கிரியையின் பின்னர், எங்கும் பரந்து நிற்கும் இறைவன் ஏனைய இடங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளங்குகின்றான். இந்நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றுந் தொடர்ந்து விளங்கும் நிலை. இந்நிலையிறுான், அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அருச்சனை, உபசாரங்கள் முதலிய ஆராதனைகளால் இறைவனை வழிபடத் தொடங்குகின்றோம். இவ்வம்சங்கள் கொண்ட வழிபாடு சுருக்கமான நித்தியக் கிரியைகளாகவும், விரிவான நைமித்திகக் கிரியைகளாகவும் திருக்கோவில் வழிபாட்டில் என்றென்றும் நிரந்தரமான இடம் பெறுவன.

"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகமன்றால் நம் போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்" என இறைவன் கூறியவாங்கு சிவபிரானும் முருகனும் வேறுபாடற்றவர்கள், எனவே, முருகனது பிரதிட்டையிலும் அவன் உருவம் பற்றிய தத்துவங்களிலும் அட்டமூர்த்தங்கள் அடிப்படைகளாக விளங்குவன.

இதுகாறும் கூறப்பட்ட கும்பாபிஷேக முறை கோவிலே இல்லாத இடத்தில் புதிதாகக் கோவிலெடுத்து விக்கிரகத்தை நிறுவி முதன்முதல் நிகழ்த்தும் அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்னும் 'முதற் கும்பாபிஷேகம்' பற்றியது.

பிரதிட்டை ஆகி, நெடுங்காலம் வழிபாடு நிகழ்ந்து வருங்கோவிலில் கருவறையின் பகுதிகள் பழுதடைந்து சிதிலமடையின், மூல விக்கிரகத்தில் சாந்நித்தியமாய் விளங்கும் இறைவனை, உரிய கிரியைகளால் கும்பத்தில் எழுந்தருளச் செய்து, வேறு ஓர் இடத்தில் தற்காலிகமான 'பால ஆலயம்' கற்பித்து, அங்கு நிறுவப்படும் மரத்தால் ஆன சிலையிலோ, திரையில் எழுதப்பட்ட திருவுருவிலோ ஒடுக்கி, கோவிலில் உள்ள பழுதுகளை அகற்றிச் சீராக்கிய பின், பால ஆலயத்தில் இதுகாறும் சாந்நித்தியம் கொண்டருளிய இறைவனை மீண்டும் கும்பத்தில் ஆகருஷித்து, ஆவாகித்து, யாகசாலை அமைத்து. அங்கு அக் கும்பத்தை ஸ்தாபித்து, யாகக் கிரியைகளை முறைப்படி நிகழ்த்திய பின் திருத்தியமைக்கப்பட்ட கோவிலின் கருவறையில் முன்னரேயிருந்த மூல விக்கிரகத்தில் இறைவனை முன்போல் சாந்நித்தியங் கொண்டருளும்படி சேர்ப்பித்தல் முறையாகும். இவ்வாறு நிகழும் கும்பாபிஷேகம் ஜிர்ணோத்தாரண கும்பாபிஷேகம் எனவும் புநர் ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனவும் சுட்டப்படும். ஜிர்ணம் = பழுதடைந்த (கோவிலை); உத்தாரணம் = மீட்டல் (திருத்துதல்); புநர் = மறுபடியும்; ஆவர்த்தனம் = திருப்பிக் கொண்டு வருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில்கள் வேண்டுமா?

**பிரம ஸ்ரீ வி. வேங்கட சுப்பிரமணியக் குருக்கள்**

இறைவன் எங்கே இருக்கின்றார் என்பது ஒரு வினா. எல்லா உயிர்களிலும் எவ்விடத்திலும் வியாபகப் பொருளாய் இருக்கின்றார் இறைவன். அவ் வியாபகத் தன்மையாலே உலகம் இயங்குகின்றது. சித்துப் பொருளாகிய இறைவனை பொறிபுலன்களால் அறிந்து அநுபவிக்க முடியாது. இது இத்தன்மையது என்று சுட்டி உணரப்படுவன எல்லாம் சடப் பொருள்கள். இறைவன் எல்லா முதன்மையும் உடையவர்.

உயிர்கள் ஆணவப் பிணிப்பால் அணுத்தன்மைப்பட்டுத் தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பப் பிறவிகள் பல எடுத்து உழல்கின்றன. இறைவனை மெய்யன்போடு வழிபட்டு சிவநெறியில் நின்று ஒழுகினால் சிறிது சிறிதாக பாசத்தளைகள் நீங்கிப் பேரின்பப் பேறு உண்டாகின்றது.

பாலில் நெய் இருப்பது போல இறைவன் எங்கணும் வியாபகமாக இருக்கின்றார். வேதசிவாகம விதிப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு நியமந் தவறாது நித்திய நைமித்திய பூசைகள் நிகழும் திருக்கோயில்களில் தயிரில் நெய்போல இறைவன் சாந்நித்தியமாக இருக்கின்றார். இது சைவ சமய நூல்களின் முடிபு.

மூன்று வயசிலே உமையம்மை அருளிய திருமுலைப்பாலையுண்டு சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம் வாய்க்கப் பெற்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமிழ் நாட்டிலுள்ள சிவஸ்தலங்களுக்குச் சென்று திருப்பாசுரங்கள் பாடித் துதித்து வணங்கினார். அப்பர் சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவ்வாறு சென்று பாசுரங்கள் பாடி வணங்கினார்கள. மெய்யடியார்கள் காட்டிய அருள் நெறியை நாமும் பின் பற்றி ஒழுகுவதே உய்தி பெறும் நெறியாகும்.

'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டா' என்றாள் ஔவைப்பிராட்டி
'திருக்கோயில் இல்லாத திருவிலூரும்' என்றார் அப்பர் சுவாமிகள்.

திருக்கோயில்கள் வேண்டும் என்பதற்கு வேறு காரணங்கள் தேடி அலைய வேண்டியதில்லை.

கோயில்கள் அமைந்துள்ள இடங்களில் ஒரு புனிதத் தன்மை நிலவுகின்றது. அங்கே நிகழும் பூசைக் காலங்களில் மணியோசை கேட்கின்றது. கோயிலுக்குப் போக வேண்டும், இறைவனை வழிபட வேண்டும், என்ற நல் உணர்வு மக்கள் உள்ளத்தில் உதிக்கின்றது, நீரில் மூழ்கித் தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளை அணிந்து திருநீறணிந்து அவர்கள் கோயிலுக்குச் சென்று அங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் திருமேனிகளை இறைவனாகவே நினைந்து பாசுரங்கள் பாடி வழிபடுகின்றனர். கோயில்கள் இருப்பது மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாத சாதனம்.

- சுபம் -

UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தெய்வம் உண்டென்றிரு

ம. சி. சிதம்பரப்பிள்ளை - தெல்லிப்பழை

"தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடிக் காணொணாத் தேவனை
என்னுளே தேடிக் கண்டுகொண்டேன்"

— அப்பர் சுவாமிகள் —

இறைவன் ஒவ்வொருவருடைய இதயக் கமலத்திலும் உயிர்க்குயிராய் நின்று இயக்குவதைத் தாண்டவ வேந்தர் அப்பர் சுவாமிகள் தமது சிவாநுபவத்தில் கண்டுணர்ந்து பாடினார். நித்தியம் எது? அநித்தியம் எது? மெய்ம்மையான இன்பம் எது? இவை போன்ற உண்மைகளைச் சந்தேக விபரீதமின்றித் தெளிய உணர்வதே பேரறிவு. இந்தப் பேரறிவை பெறுவது எப்படி?

## உண்மைப் பொருள்

எமக்கு முன்பு வாழ்ந்த ஞானிகள், சமய குரவர்கள், சந்தான குரவர்கள், சித்த புருஷர்கள், யோகிகள், மகாத்மாக்கள் ஆகிய அனைவரும் தமது யோகநெறியிற் கண்ட உண்மை எது? இறைவன் உண்டு என்பதேயாம். எல்லா முதன்மையும் உடைய முதல்வனின் ஆணைப்படியே அகில உலகங்களும் இயங்குகின்றன. ஆண்டவன் ஒருவனே உண்மைப் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பியாண்டார் நம்பி

பக்தி நெறியை இளமைப் பருவத்திலிருந்தே பயில வேண்டும். இதற்குத் தாய் தந்தையரின் வாழ்க்கை நெறி முன் மாதிரியாக அமைதல் வேண்டும். தந்தை எவ்வழி மைந்தரும் அவ்வழி என்பது முதுமொழி. பக்தி நெறி இளமைக் காலத்தில் விதைக்கப்பட்டால் அது பண்பட்ட முளையாகி வளர்ந்து பெருந்தருவாக ஓங்கி நின்று ஆன்ம ஈடேற்றப்பாதையில் பெரும்பயன் நல்கும் என்பது திண்ணம்.

நம்பியாண்டார் நம்பி இளமைப் பருவத்தில் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரிடம் கொண்ட பக்தி இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். பொல்லாப் பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்குச் செய்த அற்புதத்தை அறிந்து அபய குலசேகர சோழ மன்னன் அச் சிறுவனிடம் சென்று தேவாரத் திருமுறைகள் எங்கிருந்தன என்பதனைக் கேட்டறிந்தான். வேந்தர் பெருமகிழ்ச்சி அடைந்தார். தேவாரத் திருமுறைகளை தமிழ் கூறு நல்லுலகம் பெற்றுப் பெரும் பயன் எய்தியது. தனது தலையைக் கல்லில் மோதப் புகுந்த நம்பியாண்டார் நம்பி பக்தி வைராக்கியத்தால் பொல்லாப் பிள்ளையாரின் அருளைப் பெற்ற திறனை நினைந்து போற்றுவோம். திருநாரையூரில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானின் பொற்பாதங்களைப் பணிவோம். அபயகுலசேகர மன்னன் தேவாரத் திருமுறைகளை பெற்றுத்தந்த அரும்பணியினை அநுதினமும் நெஞ்சில் நிறுத்துவோம்.

- சுபம் -

---

## விநாயகர் வணக்கம்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
    கப்பிய கரிமுக                    னடிபேணிக்,
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
    கற்பக! மென, வினை                    கடிதேகும்;
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்,
    மற்பொரு திரள்புய                    மதயானை,
மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை,
    மட்டவிழ் மலர்கொடு                    பணிவேனே.
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
    முற்பட எழுதிய                    முதல்வோனே!
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
    அச்சது பொடிசெய்த                    அதிதீரா!
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
    அப்புன மதனிடை                    யிபமாகி,
அக்குற மகளுட னச்சிறு முருகனை
    அக்கண் மணமருள்                    பெருமாளே.

—அருணகிரிநாதர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருததடி
# பஞ்சமுக விநாயகருக்குக் குடமுழுக்கு

துர்க்கா துரந்தரி,
சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை
- செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி -

விநாயக வழிபாட்டில் ஊறித் திளைத்தவர்கள் மானிப்பாய் வாழ் சைவ மக்கள். மருததடி விநாயகனே இவர்களின் குலதெய்வம். ஆண்டு தோறும் வருஷப் பிறப்பு தினத்தன்று நடைபெறும் தேர்திருவிழா ஓர் எழுச்சிமிக்கப் பெருவிழாவாகும். மேலும் மேலும் அருட்பிரவாகத்தைப் பெருக்க வேண்டுமென்ற விருப்பினால் பஞ்சமுக விநாயகர் திருவுருவைச் சமைத்து எதிர்வரும் திங்கட்கிழமை [ 02 - 02 - 1987 இல் ] குடமுழுக்குச் செய்யவிருப்பது பாராட்டுக்குரியது.

எமது சிந்தனையும் செயலும் திருவருட் பக்கம் திரும்பும் போது ஒரு திருப்தி ஏற்படுகிறது. எமது உய்வுக்கும், வாழ்வின் உயர்வுக்கும் இதுவே முதல் வழியாகும். எத்தனை நாஸ்திகம் தலைவிரித்தாடினாலும், பிற மதத் தாக்கம் வந்து நலிவை ஏற்படுத்தினாலும் ஐயாயிரமாண்டுகளுக்கு மேலாக உறுதிப்பாட்டோடு விளங்குவது எமது சைவ மதம். சமய குரவர்களால் போற்றப்பட்டு எமக்கு இம் மதத்தின் பெருமை உணர்த்தப்பட்டது. இதனை உணர்ந்த முடியுடைத் தமிழ் வேந்தர் திருக்கோவிற் திருப்பணிகளைச் செய்து சிறப்பித்தனர்.

இன்று மக்களாட்சிக் காலம். மக்களே முன் வந்து தத்தம் மதத்தையும் மொழியையும் வளர்க்கிறார்கள். தெய்வ நம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்வு பாலைவனமாகி வரண்டு விடும். மண் வரண்டால் நீரைப் பாய்ச்சலாம். ஆனால் மனம் வரண்டால் திருவருள் நீரைத்தான் பாய்சிக் குளிர்விக்க வேண்டும்.

எனவே இக்கட்டான இந்தச் சூழ்நிலையிலும் திருக்கேயில் நினைப்பை மேற்கொண்டு வரும் திருவருட் செல்வர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

சைவ மக்களின் காப்புக் கடவுள் கணபதி. "அகர முனிவன் அகஸ்தியன் தனது கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை" என்று கூறும் பகுதியிலிருந்து விநாயக வழிபாட்டுக் குறிப்புக் காணப்படுகிறது.

விநாயகர் கோவில்களில் பஞ்சமுக உற்சவமூர்த்தி மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற வேண்டும். இலட்சார்ச்சனை, பஞ்சமுக அர்ச்சனை ஆகியவற்றுக்கும், வீதியுலாவுக்கும் இம் மூர்த்தி வேண்டற்பாலது. இத் திருப்பணிகள் செய்யவும், திருவருளே கைகூட்ட வேண்டும்.

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சமுக விநாயகர்

## தொகுப்பு - எஸ். கே. நடராசா - பொறியியலாளர்

'விநாயகர்' என்றால் தனக்கு மேலான ஒரு தலைவர் இல்லாதவர் என்பது பொருள். வி – மேலான, நாயகர் - தலைவர். விநாயகப் பெருமான் பிரணவப் பொருளாய் விளங்குகிறார். அவரது திருமேனி ஞானமேயாம். அதனால் அவரை 'பிரணவப் பொருளாம் பெருந்தகையைங்கரன், என்றும் "ஞான முதல்வன்" "ஞானக் கொழுந்து" என்றும் நூல்கள் போற்றுகின்றன.

யானைமுகம் ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தைக் குறிப்பது, ஓம் - அ- உ – ம். ஒருமுறை உச்சரித்த மாத்திரையே உயர்ந்த கதியிற் சேர்ப்பதால் ஓங்காரமெனப்படும். எல்லா பிராணன்களையும் (உயிர்களையும்) இறைவனிடம் சேர்ப்பிப்பதால் பிரணவம் எனப்படும். பிரணவம் வியட்டி, சமட்டி என இருவகைப்படும். வியட்டி, அகர, உகர மரங்களாகும். சமட்டி அம் மூன்றுஞ் சேர்ந்து ஓம் என்பதாகும். உலகங்களாகிய சராசரிப் பிரபஞ்சங்களெல்லாம் அம்மூவகையின டங்கும். அதன்கண் அடங்காதது ஒன்றுமில்லை. எனவே, பிரணவத்துள் எல்லாமடங்கும். பிரணவ சொரூபியாகிய விநாயகக் கடவுளே பரப்பிரமமாகவும் விளங்குகின்றார்.

சைவசமயம் சிவபெருமான் ஒருவரையே முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது. எனவே, சிவபெருமானே, விநாயகக் கடவுளாக எழுந்தருளியிருக்கிறார் என்பது கருத்து. "ஏகப்பராத்மா பகுதேக வர்த்தி" என்னும் வேதம். அதாவது பராத்மா ஒருவர் திருமேனிகள் பல. இதையே "யச்சமகேச்வர; யாசோமா; யச்ச விநாயக யச்ச ஸ்கந்த" என்று சொல்கிறது. அவனே மகேசுபரன்; அவனே உமை; அவனே விநாயகர், அவனே ஸ்கந்தர். மேலும்,

"ஒருமையால் உணருவோர் உணர்வினுக் குணர்வதாம்
பெருமையால் எங்கணும் பிரிவரும் பெற்றியால்
அருமையால் ஏவரும் அடிதெழும் தன்மையால்
இருமையாம் ஈசனே என்ன நின்றருளுவான்"
என்னும் கந்தபுராணச் செய்யுளின்படியும்,

"........ ........................ சங்கரா சூலபாணியே
தாணுவே சிவனே
கனகநற்றாணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமர சேகரனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருவிசைப்பாவின்படியும் விநாயகக் கடவுள் சிவக் கடவுளேயெனத் தெளிவாகிறது.

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் பத்துத் திருக்கரங்கள், பதினைந்து திருக் கண்கள், ஐம்முகக் கடவுள் என்றால் சிறப்பாகச் சிவபெருமானையும் ஐங்கரக் கடவுள் என்றால் விநாயகரையுமே குறிக்கும். ஆனால் விநாயக சிவ அபேதப்படி விநாயகர் ஐந்து திருமுகங் கொண்டருடளும்போது பஞ்சமுக விநாயகர் எனச் சிறப்பிக்கப்படு கின்றார். பஞ்சமுக விநாயகருக்கு தனியாகப் பத்துத் திருக்கரங்களும் ஐந்து துதிக் கைகளோடு சேர்ந்து பதினைந்து திருக்கண்களும் உண்டு. அபய வரத கரங்களோடு பாசம், அங்குசம் முதலியனவும் மும்மூர்த்திகளின் ஆயுதங்களையும் தரித்திருக்கின் றார். பஞ்சமுக விநாயகரின் தோற்றத்திற்கு ஒரு கதையுண்டு.

திருபுராசுரனால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட சிவபெரு மான் யுத்தத்திற்கு முதலில் விநாயகரைத் தியானஞ் செய்கிறார். விநாயகர் சிவபெரு மானுடைய ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றி பஞ்சமுக விநாயகராகக் காட்சி யளிக்கின்றார். சிவபெருமான் திருபுராசுரனை அழித்தார். இக்கதை விநாயக புராணத் தில் காணப்படுகின்றது.

விநாயக பெருமானது சகஸ்ர நாமஸ் தோத்திரத்திலே "பஞ்சகராய, பஞ் சாட்ச ராத்மாய, பஞ்சதாலாய, பஞ்சவர்ணாய, பஞ்சப்ராணக மாத்ராய, பஞ்சபா ணுய, பஞ்சபாணி நிவாரிதாய, பஞ்சக்ருத்யாய, பஞ்சாஷரபாராயணாய, பஞ்சசிவாத் மகாய, பஞ்சபட்சிப்ரியாய, பஞ்சாதாராய" என்று வருவது கவனித்தற்குரியது.

ஐந்தொழிலைச் செய்கின்றவரும், ஐம்பொறிகளையும் அடக்கி ஐந்தெழுத்தை யோதும் அன்பர்களை ஆள்கின்றவரும், ஐந்து மூர்த்திகளுக்கும் அதிபரான பரம் பொருள் தாமே என்பதைக் குறிப்பதாக பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் அமை யும்.

மேலும்,

எமது உடலின் ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்திற்கு அதிதேவதை விநாய கர். குய்யத்திற்கும் குத்தத்திற்கும் நடுவில் குண்டலினி என்னுஞ் சக்தி வட்டவடிவ மாக இருக்கும். அதன் நடுவில் முக்கோணம் இருக்கும். அதில் வ, ச, ஷ, ஸ, என்னும் நாலிதழ்க் கமலம் இருக்கும். அதன் நடுவில் ஓம் என்னும் பிரணவம் இருக் கும். இவ்வைந்தின் அமைப்பே பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் என்றும் அமை யும். நான்கு எழுத்துக்களும் நான்கு திருமுகங்களாகவும் உச்சிமுகம் ஓம் என்னும் எழுத்தாகவும் அமைந்துள்ளது போன்று பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் காணப் படுகின்றது. மேலும்,

விநாயக் கடவுள் பிரணவ'வஸ்வ ரூபி என்று முன்பு கூறப்பட்டது. பிரணவம் முத்திகாமிகளால் தியானிக்கப்படுமொன்று, அது ......... ......

"அஷ்டாங்கஞ்ச சதுஷ்பாதம் திருஸ்தானம் பஞ்சதைவதம்" என்ற தேவ வச னப்படி பிரணவம் எட்டு அங்கங்களையும் மூன்று தானங்களையும் ஐந்து தேவதைகளையு முடையது. இதன்படிக்கு பிரணவ தேவதைகளைந்தும் விநாயகருக்கு பஞ்ச முகங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து பஞ்சமுக விநாயகராகக் காட்சி தருவது நாம் செய்த பாக்கியமே. ஆதலால் பஞ்ச பொறிகளின் வயப்பட்டு பஞ்சமாபாதகங்களையுஞ் செய்யாது பஞ்ச பூதங்களின் சேர்க்கையான இந்த உடம்பின் பற்றை விடுத்து பஞ்ச புலங்களையும டக்கி பஞ்ச தொழிலினிற்கு அதிபரும் பஞ்சாஷத்தின் உட்பொருளாய் விளங்கும் பிரணவப் பொருளாய் விளங்குகின்ற பஞ்சமுக விநாயகரின் பாதங்களைத் தஞ்சமடைபவர் பெறுவதும் பதமுத்தியாகிய பேரின்பவீடாம்.

பிள்ளையாரைக் குறித்து வழிபாடு செய்யும் சோடச நாமம் எனப்படும் பதினாறு திருப்பெயர்களும், அவற்றின் பொருளும் பின்வருமாறு;

### பதினாறு திருப்பெயர்கள்.

| | |
|---|---|
| 1. ஓம் சுமுகாய நம | 9. ஓம் தூமகேதவே நம |
| 2. ஓம் ஏகதந்தாய நம | 10. ஓம் கணத்யசஷாய நம |
| 3. ஓம் கபிலாய நம | 11. ஓம் பாலசந்த்ராய நம |
| 4. ஓம் சஜகர்ணிகாய நம | 12. ஓம் கஜானனாய நம |
| 5. ஓம் லம்போதராய நம | 13. ஓம் வக்ரதுண்டாய நம |
| 6. ஓம் விகடாய நம | 14. ஓம் சூர்ப்பகர்ணாய நம |
| 7. ஓம் விக்கினராஜாய நம | 15. ஓம் ஹேரம்பாய நம |
| 8. ஓம் கணாதிபதயே நம | 16. ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம |

1. ஓம் சுமுகாய நம:
திருவருள் பொழியும் நல்ல முகமுடையவருக்கு வணக்கம்.

2. ஓம் ஏகதந்தாய நம:
ஏகதந்தர் - அகில புவனங்களுக்கும் ஒரே தலைவர் எனக் குறிக்கும் ஒற்றைத்தந்தம் உடையவர்.

3. ஓம் கபிலாய நம:
கபிலர் – சிவமும் சிவசக்தியும் பேதமறப் பொருந்திய தன்மையை விளக்கும் கருமை கலந்த பொன் வண்ணம் உடையவர்.

4. ஓம் கஜகர்ணிகாய நம:
கஜகர்ண- யானையின் செவிகள் ஓயாது அசைந்து கொண்டே இருப்பன. அகில சீவராசிகளின் துன்பங்களையெல்லாம் துடைப்பனவாக அமைந்த யானைத் திருச் செவிகளை உடையவர்.

5. ஓம் லம்போதராய நம:
லம்ப- உதரன்- லம்போதரன்- தளர்ந்த பெருவயிற்றை உடையவன். அகில சீவராசிகளையும் தமது திருவயிற்றில் கொண்டமையால் தளர்ந்த பேழை வயிற்றினை உடையவர்.

6. ஓம் விகடாய நம:
விகடம்- பகிடி, அழகு எனப் பொருள்படும். ஆன்மாக்களின் இன்பமயமான விகடக் கூத்தை விரும்பும பெருமான். இனி வி-கடம் எனப் பிரித்து (வி-அறிவு கடம்- அருள்நெறி) ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை நீக்கி அறிவுமயமான ஞான அருள் நெறியைப் பரப்புவர் எனவும் பொருள் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஓம் விக்கினராஜாய நம:
விக்கினராஜர் - இடையூறுகளை, ஆளும் அரசராகி, ஆன்மாக்களுக்கு அவ ரவர் வினைப்பயன்களுக்கேற்ப இடையூறுகளை ஆக்கவும், போக்கவும் வல்ல பமுடையவர். ''தனதடி வழிபடும் அவரிடம் கடிகணபதி'' என்பது தேவா ரம்.

8. ஓம் கணாதிபதயே நம:
சிவகணங்களுக்கெல்லாம் அதிபதியானவர்.

9. ஓம் தூ மகேதவே நம:
தூபம்- புகை, கேது- கொடி. புகைக்கொடியை உடைய அக்கினியின் சொரூபரான மகாதேவர் சிவபிரானும் விநாயகரும் தம்முள் அபேதமானவர் என்பது இதனாலும் பெறப்படுகின்றது.

10. ஓம் கணாத்யக்ஷய நம:
சிவ கணங்களை வழி நடத்தும் தலைவரானவர்.

11. ஓம் பாலச்சந்தராய நம:
(பாலம்-நெற்றி) சாட்சாத் சிவபரம் பொருளை விநாயக மூர்த்தமாதலின் சிவபெருமானைப் போல நெற்றியில் பிறை சூடியவர் என்பது ஒரு பொருள். இனி, பாலன்-சிறுவன் எனக்கொண்டு விநாயகப் பெருமான் பிராமணச் சிறுவனாகத் தோண்றி எல்லோருக்கும் இடர்விளைத்த அனலாசுரனைத் தம் திருக்கரத்தினால் எடுத்து விழுங்கித் தமது திருவயிற்றில் அடக்கியபோது அகில ஜீவராசிகளும் அனல் வெப்பத்தினால் வருந்தினமையால் முனிவர்களும் யாவரும் அறுகினால் பூஜிக்க, அகிலத்தையும் சந்திரனைப் போலக் குளிர் வித்த காரணம் பற்றி பாலச்சந்திரன் எனத் திருப்பெயர் பூண்டார் என் பதுமாம்.

12. ஓம் கஜாநநாய நம:
கஜாநகர்- கஜ்- ஆநநர்- ஓங்கார வடிவான யானை முகத்தை உடையவர். (கஜ- யானை, ஆநநகம்- முகம்.)

13. ஓம் வக்ரதுண்டாய நம:
வக்ரதுண்டர்- வளைந்த துதிக்கரத்தை உடையவர்.

14. ஓம் சூர்ப்பகர்ணாய நம:
சூர்ப்பகர்ணர்- சுளகு போன்ற பரந்த இரு செவி உடையவர்.

15. ஓம் ஹேரம்பாய நம:
ஏரம்பர்- அழகு வாயந்தவர்.

16. ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:
ஸ்கந்தபூர்வஜர்- கந்தக் கடவுளுக்கு முதல்வராய்த் தோன்றியவர்.

பிள்ளையாருக்குரிய இந்தப் பதினாறு திருப்பெயர்களையும் வித்தியாரம்பத்திலும் விவாகத்திலும், கிரகப்பிரவேசத்திலும், பிரயான ஆரம்பத்திலும், போர் முனையிலும் வேறு வேறு எக்கருமத்தைத் தொடங்கும் போதும் எவன் ஒருவன் பக்தி யோடு சொல்லுகின்றானோ அல்லது பிறர் சொல்லும்போது இவற்றைக் கேட்டிருந்து வணங்குகின்றானோ அவனுக்கு எந்தவித இடையூறும் நேராது. நாம் எல்லாம் பிள்ளை யாரின் பெருமைகளை அறிந்து போற்றித் திருவருளுக்குப் பாத்திரர் ஆவோமாக.

-சுபம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

மாணியம் பதி

# மருதடி விநாயகர் பதிகம்

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## காப்பு

மருதடி விநாயகர்

திருவளருங் கல்விவருந் தீவினைக ளோடுங்
குருவருளும் வீடுங்கை கூடும் — பெருவளஞ்சேர்
மானி மருதடியில் வந்தருளு மைந்துகரத்
தானைமுகத் தானைநினைந் தால்

## நாமகள்

வந்தவினை விக்கினங்கள் மாற்றும் மருதடிவாழ்
தந்திமுகத் தெந்தை தமிழ்பாடச் — சந்ததமும்
தஞ்சமஞ்சொல் வஞ்சிமஞ்சு தண்சிலம்பு கொஞ்சு விஞ்சு
பஞ்சுமஞ்சு பாதபங்க யம்

## குரு

சிந்திக்கும் மெய்யடியார் செய்கருமங் கைகூட்டும்
தந்திக் கடவுள் தமிழ்வருமே — முந்தி
எனைநினைந்திப் புவிபுகுந்தற் புதுமிருஞ்சொற் றருமவன்பொற்
கனககஞ்சக் கழனினைந்தக் கால்

## நூல்

சீர்கொண்ட மணிமிடறு மெரிகொண்ட செங்கையுந்
திங்கள்கொண் டிடுசென்னியுந்
தீயவினை திறைகொண்ட ,நுதல்கொண்ட விழியுமுள
சிவபிரான் களிறுகவும்
பார்கொண்ட பலகோடி மன்னுயிரை யீன்றன்பு
பாலிக்கு மிமைய சிமையப் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பசுங்கொடியொர் பிடியாக வுங்கருணை
பயில்கின்ற காலத்திலே
ஏர்கொண்ட விருசெவியு முக்கண்ணு நால்வாயு
மெழில்கொண்ட வைந்துகரமும்
ஏழுலக முங்கொண்ட தொந்திவயி றுங்கொண்
டெழுந்தருளு மெம்பிரானே
கார்கொண்ட வெந்துயர்க் கட்டறுத் திருபாத
கமலங்கள் தந்தாளுவாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (1)

செம்பொன்செய் மாணிக்க மகுடமணி சென்னியுஞ்
சிந்தூர திலத நுதலும்
செய்யபொன் னரிமாலை வெண்டரள மணிமாலை
சீர்கொள்முந் நூல்மார்பமுங்
கொம்பொன்று கிம்புரிப் பூணுமிரு செவிமேவு
குழைகளுங் கருணைவிழியும்
கூர்கொண்ட வங்குசம் பாசமொடு மோதகங்
கோடுகொண் டிடுகைகளும்
கும்பங்கொள் மணிவயிறு மாரகே யூரமுங்
கோசிகப் பட்டி னுடையுங்
குடிலைதரு விந்துநா தச்செஞ் சிலம்பொலிசெய்
குரைகழலு மாகவருவாய்
கம்பங்கொள் குஞ்சரப் பிரணவப் பொருளான
கணபதி யெனுங்கடவுளே
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (2)

வேதத் திலும்வேத முதலிலும் முடிவிலும்
மேவுமோங் காரத்திலும்
விரிவுபெறு மொருகோடி மந்திரங் களினுமவை
விளைகின்ற குடிலைவிந்து
நாதத் திலும்நாத முடிவிலும் பரையாதி
நவபேத மாய்நடிக்கும்
நங்கைதிரு மடியிலும் விண்ணவர்கள் முடியிலும்
நம்பிரான் பொற்றோளிலும்
போதத்தி லும்பொலியு மெம்பிரா னடியவர்கள்
புல்லினுஞ் சாணத்திலும்
போற்றிசெய வெளிவரும் நீங்காத கருணையின்
புதுமையை யுரைக்க வசமோ
காதத்திலும் நாறும்மதக் குஞ்சரக்
கடவுளே வந்தாளுவாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம் புனுகுசவ் வாதிவை கலந்தநீர்
தாபித்த கலசநன்னீர்
தாழையிள நீர்தயிர்நெய் பால்கருப் பஞ்சாறு
சர்க்கரை பழஞ் செழுந்தேன்
மந்திர முறைத்தாட்டி நுண்டுகிலி னொலொற்றி
மாசில்வெண் பட்டுடுத்தி
மாணிக்க மகுடமும் மரகதச் சுட்டியும்
மணியார கேயூரமும்
சிந்துரத் திலதமும் பொன்னினுப வீதமும்
செஞ்சிலம் புந்தண்டையும்
செங்கைமணி யாழியுங் கண்டிகை பதக்கமுஞ்
சேர்த்துமலர் மாலைசூட்டிக்
கந்தமலி தூபதீ பங்காட்டி வழிபடக்
கண்ணருள் செயுங்கடவுளே
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு (4)
கற்பகப் பிள்ளையாரே

முப்பழ வருக்கமிடி யிக்குமுறி யெட்கசி
முறுக்குவடை யப்பமிளநீர்
மொச்சைகட லைப்பொரியல் சர்க்கரைய வற்பயறு
முக்குறுணி மோதகமுடன்
அப்பழ மினிக்குநற விட்டலிகி ழுக்குமுறி
அற்புதமி குத்தவமுதும்
அற்பொடுநி ரைத்தடியர் கர்ப்புர விளக்குமிட
அக்கணமு ளத்துமகிழா
தொப்பையுத ரத்தையுல கத்தொடுகு லுக்கியடி
தொத்திமி திமித்தி மியெனச்
சுற்றியருள் நிர்த்தமிடு மத்தபர முத்தசிவ
சுத்தசுக முத்திமுதல்வா
கற்பனை கடத்துபவ ருட்பொலிப தத்துரிய
கர்த்தவர நித்த மருள்வாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு (5)
கற்பகப் பிள்ளையாரே

சந்தனப் பொதியத் தமிழ்க்குறு முனிக்கடவுள்
தண்புனல் கவிழ்த்ததேபோல்
சாமியென் சஞ்சிதக் கரகமுறை யிருவினைச்
சஞ்சலப் புனல்கவிழ்த்தே
இந்திரன் நந்தவனத்தந்த கந்தமல
ரினமலர வைத்ததேபோல்
என்னிதய நந்தன வனத்தன்பு நன்மல
ரினங்களரு ளோடுவிரிய
அந்தநன் மலர்கொய்து னடிகளர்ச் சனைபுரியு
மரியவர மென்று தருவாய்

UNIVERSITY OF JAFFNA SRI LANKA
ARCHIVES



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுவா கனபூத கணநாத சதுர்வேத
வாகமப் போத பாதா
கந்தமலி கொன்றையறு கம்புலியி ளங்குழவி
கங்கையணி யெங்கள் முதல்வா
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (6)

வந்தவினை யோடிடும் விக்கினம் வீடிடும்
வருகின்ற வினைகள் விலகும்
மாறாத நோய்கெடும் பொல்லாத வறுமையும்
வஞ்சனைகளும் போய்விடும்
வெந்துய ரகன்றிடும் தீயநாள் கோளறும்
வெம்பகை யழிந்துபோகும்
மேலான செல்வமும் கல்வியும் ஞானமும்
வீடுமெளிதிற் கைகூடும்
புந்திமகிழ் மணமுண்டு குணமுண்டு கணமுண்டு
புகழுமுண்டு புதல்வருண்டாம்
பூலோக முடிமன்னர் வாழ்வுண்டு மும்மதப்
போதகக் களிறேயுனைக்
கந்தமலர் சிந்தி வழிபடு மடியவர்க் கென்பர்
கணபதி யெமக்கு மருள்வாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (7)

பொல்லாத பாவங்கள் தீரவேண்டும் நல்ல
புண்ணியம் சேரவேண்டும்
புல்லியோர் நட்பறப் போகவேண்டும் கற்ற
புனித ருறவாக வேண்டும்
சொல்லேறு நின்புகழ் நிறுக்கவேண்டும் கெட்ட
சொற்களை வெறுக்கவேண்டும்
தூயநின்னருள் வெள்ளம் நிறையவேண்டும்கொடிய
துன்பங்கள் மறைய வேண்டும்
இல்லாதவர்க்கு நிதியீய வேண்டும் பிறரை
இரவு செயல் மாயவேண்டும்
எவ்வுயிர்க்கும் கருணை சொரியவேண்டும் பேத
மின்றியருள் விரிய வேண்டும்
கல்லாத நாயினேம் வேண்டும் வரந்தந்து
காப்பதுன் கடனையனே
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (8)

வெற்றிமிகு கயமுகனை வீட்டியே யயனுதி
விண்ணவர்க் கருள் கொழித்தாய்
விசய கோதண்ட ராகவனைத் தொடர்ந்திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகத்தியை யழித்தாய்
செற்றமிகு திரிபுரத் தசுரரை யெரிக்கவருள்
தேரினைப் பொடிபடுத்தாய்
செந்தமிழ்க் குறியமுனி குண்டிகைப் புனிதநீர்
சிந்திடும்படி விடுத்தாய்
நற்றமிழ் விரும்பி யவ்வைக்கருள் மடுத்தனைபின்
நம்பிக்குமருள் கொடுத்தாய்
நாயேங்களுக்கு நீ கனவில் வந்தருள் செய்த
நன்றிக்கு மாறுமுண்டோ
கற்றவர் சுவைக்கின்ற மெஞ்ஞான போதகக்
கனியெருன் னடிகள் சரணம்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (9)

தேவாதிதேவனே சிவனருளும் மைந்தனே
தேவியம் பிகை பாலகா
செங்மண்மால் மருகனே யறுமுகன் தமையனே
சித்திபுத்திகள் மணாளா
மூவாத முதல்வனே பொற்சிகரி வாகனு
மூலவேங்கார வடிவே
மோதகக் கையோனே முச்சுடர்க் கண்ணனே
முதுபூத கணநாதனே
பாவாணருக்கருள் செய் கலைஞான பண்டிதா
பாரோங்கு குடவயிறனே
பரம காரண ஞான விகடநட வானந்த
பஞ்சாட்சரக் கடவுளே
காவாதிருந்திடக் கடனில்லை வெளிவந்து
கழறந்து காத்தருள்வாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே (10)

வாராத சித்திபுத்திகளருளும் வள்ளலே
வற்றாத சுகவாரியே
வாடாத மெஞ்ஞான கஞ்சமே யோனசுவை
மாறாத தெளிதேறலே
தீராதநோய்களைத் தீர்க்கின்றவமுதசஞ்
சீவியே மிடிகொடுக்கும்
தேயாத செல்வமே ஓடாத செம்பொனே
தெள்ளமுதமே கட்டியே
பாரா தரித்திடும் முன்னவா பின்னவா
பாவை வல்லபை கொழுநனே
பாதகமு மன்பரருள் பேதகமு முடனுணும்
பரமனே யுனைநம்பினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரானை மாமுகக் கடவுளே யிருவிழிக்
கருணை செய்தெமை யாளுவாய்
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே

**தனியன்**

ஐங்கரா போற்றி முக்கண்ணனே போற்றிபா
சாங்குச கரத்த போற்றி
ஆகுவாகன போற்றி பேழை வயிறு போற்றி
அம்பிகை குமரா போற்றி
பொங்கரவ கங்கண புராதனு போற்றிநட
பூதகணநாத போற்றி
போதனே போற்றி குரு நாதனே போற்றி மெய்ப்
போதக் குருவே போற்றி
சங்கரா போற்றி சிவசம்புவே போற்றியிரு
தண்டையணிதாள போற்றி
சர்வ விக்கின விநாயக போற்றி தடவிகட
சக்கர நடத்த போற்றி
கங்கை பாலக போற்றி திங்கள் சூடியஞான
கணபதி போற்றி போற்றி
கருதடியர் வினைகடிய மருதடியில் நடனமிடு
கற்பகப் பிள்ளையாரே

**வாழி**

ஆனைமுகம் வாழி ஐந்து கரம் வாழி
ஞான மருளுமிரு தாள்வாழி—மாணி
மருதடியாரும் வாழி வண்டமிழ்ப் பாமாலை
கருதடியாரும் வாழி காண்

---

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா ! உன் அடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்; இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

- திருநாவுக்கரசு சுவாமிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மருதடி விநாயகர் ஆலய

# வரலாறு

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இலங்கையின் பல பாகங்கள் தமிழரசர்களால் அரசாளப்பட்டு வந்தன. அக் காலத்தில் யாழ்ப்பாணம் முழுவதும் சைவ மணங்கமழும் செந்தமிழ் நாடாகவே விளங்கிற்று. சிவாலயங்களும், அம்மன் கோவில்களும், விநாயகர் ஆலயங்களும், முருகன் கோவில்களும் எங்கணும் இருந்தன. வேதங்களையும் சிவாகமங்களையும் கற்றுணர்ந்த ஒழுக்க நெறி தவறாத ஆதிசைவ அந்தணர்கள் அத் திருக்கோவில்களில் நித்திய நைமித்திய பூசைகளை நியமந் தவறாது செய்துவந்தனர். திருமுறை ஓதுதலும் புராணபடலங்களும் எல்லாப் புண்ணிய ஸ்தலங்களிலும் கிரமமாக நடைபெற்று வந்தன. சைவநெறி தழைத்தோங்கி மக்கள் அனைவரும் உய்தி பெறவேண்டும் என்ற பேரார்வத்தினால் அறிஞர்களும் தனவந்தர்களும் சைவாபிமானிகளும் ஆவன செய்தும் வேண்டிய பொருளுதவி கொடுத்தும் சமய வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தனர். அதனால் திருக்கோவில்கள் எல்லாம் பெருஞ் சிறப்புடன் பொலிவுற்று விளங்கின. தமிழரசர்களின் ஆதரவும் பெருமளவில் கிடைத்தது.

இன்று எங்கணும் உள்ள சிவஸ்தலங்களுள் முதன்மையுடையது சிதம்பரம் வேறோர் அடைமொழியுமின்றி கோயில் என்றால் அது சிதம்பரம் நடராஜப்பெருமான் திருக்கோயிலைக் குறிக்கும். அதன் பெருமையை விரித்துரைப்பது உமாபதி சிவம் அருளிய கோயிற்புராணம். வியாக்கிரபாதர் பதஞ்சலி என்னும் பெயருடைய இரு முனி சிரேஷ்டர்கள் ஸ்தாபித்து வழிபட்டு வந்த சிவலிங்க மூர்த்தி அந்த ஸ்தலத்தில் இருப்பதனால் சிதம்பரம் முதன்மை உடையதாயிற்று இந்த இரு முனிவர்களுக்கும் தைப் பூசத் திருநாளில் இறைவன் காட்சி கொடுத்தார் என்று சிதம்பர மான்மியமும் கோயிற்புராணமும் கூறுகின்றன.

சிதம்பரம் என்னும் சிவஸ்தலத்தைப் போல மருதடி விநாயகர் ஆலயமும் யோக நிஷ்டை கைவந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பூசித்து வந்த புண்ணிய ஸ்தலம் என்று ஒரு வரலாறு உண்டு. இது தமிழரசர்களின் ஆட்சிக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பழமை வாய்ந்து, அந்தச் சிவயோகியார் விநாயகப் பெருமானை உபாசனாமூர்த்தியாகக் கொண்டவர். அவரது நியமந் தவறாத வேத மந்திர சக்தியின் சாந்நியத்தால் மருதடி விநாயகர் ஆலயம் மகத்துவமுடையதாயிற்று. பெருந்திரளான மக்கள் வந்து வணங்குவதற்கு அதுவே காரணம் என்பர். இதன் தென் திசையிலுள்ள திருக்குளம், 'பிள்ளையார் குளம்' என்னும் பெயருடையதாயிற்று என்றும் அவ்வரலாறு கூறுகின்றது.

இஃது இவ்வாறாகப் போர்த்துக்கேயர் எனப்படும் பறங்கியர் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றினர். தமிழரசர்களின் ஆளுகை முடிவுற்றது. பறங்கியரின் கொடுங்கோன்மையால் பல நூறு சைவாலயங்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேமன் கத்தோலிக்க மதத்தை மேற்கொள்ளும்படி தமிழ் மக்களைப் பறங்கியர் துன்புறுத்தினர். கோயில்களைத் தகர்த்தெறிந்தால் சைவமக்கள் சிவநெறியை மறந்து யேசுநெறியை மேற்கொள்வார்கள் என்று பறங்கியர்கள் மனப்பால் குடித்தனர். அவர்கள் எண்ணியதற்கு நேர் மாறாகத் தமிழ் மக்கள் சிவநெறி வழிபாட்டில் முன்னையிலும் ஊன்றிய பக்தி சிரத்தையுடையவராயினர். பொங்கலும் பூசையும் வழிபாடும் திருக்கோயில்கள் இருந்த இடங்களில் பறங்கியர் அறியாவண்ணம் நிகழ்ந்து வந்தன. போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலம் நெடுங்காலம் நிலைக்கவில்லை. இலங்கையை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

ஒல்லாந்தர் தமது கிறிஸ்து மதத்தைப் பரப்புவதில் ஊக்கம் செலுத்தவில்லை. பொருளீட்டுவதில் அவர்கள் பெருமுயற்சி கொண்டார்கள். இக்காலத்திலே தமிழ் நாட்டில் தொண்டைமண்டலத்தில் நிகழ்ந்த அரசகலகம் ஒன்றுக்கு அஞ்சி வேளாண் குடும்பத்தினர் பலர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் குடியமர்ந்து வாழ்ந்தனர். அவர்களுள் தியாகராசக் குருக்கள் என்பவரும் ஒருவர். இவர் நியமந் தவறாத நல்லொழுக்கம் உடையவர். சைவசித்தாந்த நூல்களையும் வேறுபல சைவசமய நூல்களையும் கற்றுணர்ந்த சிவபக்தர். மானிப்பாயை அடுத்துள்ள நவாலியூர் வைரவசுவாமி கோயிலொன்றில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். இப்பணியை ஓராண்டு காலம் வரைசெவ்வனே செய்துவந்தார். அவ்வூர் வாசிகள் சிலர் சைவநெறிக்கு ஒவ்வாத சில காரியங்களை கோயிலின் வாயிற்புறத்தில் செய்தனர் அச்செயல்களைத் தொடர்ந்து காணப் பொறுக்கமாட்டாதவராய் அவ்விடத்தை விட்டகன்றார். கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார். ஓரிடத்தில் மருதமரச் சோலையும் பிள்ளையார் குளமும் இருப்பதைக் கண்டார். பொங்கல் பூசைகளும் அங்கே காணப்பட்டன. அக்காட்சி அவரைக் கவர்ந்தது இறைவன் திருக்குறிப்பினால் சிவயோகியார் ஒருவர் பூசித்து வந்த விநாயகர் கோயில் முன்பு அவ்விடத்தில் இருந்ததை உணர்ந்தார் முன்பு நிகழ்ந்தவற்றையும் இனி நிகழ்வதனையும் அறியும் ஆற்றலை யோகக் காட்சி என்பர் இவரும் அத்தகைய யோகக் காட்சி உடையவர் போலும். தான் அறிந்த திருக்குறிப்பை அங்குள்ள மக்களுக்கு அவர் கூற, அவர்களும் பெருமகிழ்வெய்தினர். அவ்விடத்தில் மீண்டும் ஓர் ஆலயம் அமைத்து விநாயகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தியாகராசக் குருக்கள் அதன் அர்ச்சகரானார் அன்பர்களின் ஆதரவால் கோயில் மேன்மேலும் வளர்ச்சியடைந்து வந்தது. ஒல்லாந்தரின் ஆட்சிக்காலமும் போய் இலங்கையை ஆங்கிலேயர் அரசாளத் தொடங்கினர்.

ஆங்கிலேயர் தமது கிறிஸ்த்துநெறியைப் பரப்புவதில் கருத்துடையவர்களாயினும் வழிபாட்டுச் சுதந்திரத்தை மக்களுக்குக் கொடுத்தனர். அதனால் அழிந்துபோன திருக்கோயில்கள் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டன. தனவந்தர்கள் திருப்பணி வேலைகளைச் செய்வதில் மிக்க ஆர்வங்கொண்டனர். சைவ நன்மக்கள் வாழ்ந்த இடமெல்லாம் கோயில்களின் மணியோசையும் மந்திர ஓசையும் திருமுறை ஓசையும் புராண படனங்களும் திருவிழாப் பொலிவும் காணப்பட்டன.

மருதடி விநாயகர் ஆலயமும் நன்றாக நிர்மாணிக்கப்பட்டு பக்த கோடிகள் பெருந்திரளாக வந்து வழிபட்டனர். தியாகராசக் குருக்களுக்குப் பின்பு ஆதிசைவ அந்தணர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டனர். நித்திய பூசையும் திருவிழாக்களும் மிக்க சிறப்புடன் நடைபெறலாயின. பகற்பொழுது நிகழும் திருவிழா முடிவில் உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவ மூர்த்தி உள்வீதி சுற்றிவருவார். இராக்காலத் திருவிழா முடிவில் இசை விற் பன்னர்களின் மங்கள இசையுடன் உற்சவமூர்த்தி பலவகை அலங்காரங்களுடன் வெளிவீதி சுற்றிவருவார். அதனைக்கண்டு பெருந்திரளான பக்தர்கள் ஆனந்த பரவச ராய் மெய்ம்மயிர் சிலிர்ப்ப வணங்குவது ஓர் கண்கொள்ளாக் காட்சி. ஆண்டு தோறும் தேர்த்திருவிழா மகோற்சவம் சித்திரை மாசம் புதுவருடப் பிறப்பன்று நிகழ்ந்து வரு கின்றது.

கோயிலின் நிர்மாணத் திருப்பணிவேலைகள் காலத்துக்குக்காலம் பொதுமக் களாலும் தனவந்தர்களாலும் செய்யப்பட்டு வந்தன. எனினும் சில தனிப்பட்ட நபர் களால் கோயில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1982ம் ஆண்டில் அவர்களது நிர்வாகம் நீங்கியது. கோயிலை நிர்வகிப்பதற்கு வழிபடுவோர்சங்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் களால் தெரிவு செய்யப்படும் தருமகர்த்தாசபையினர் வழிபடுவோர் சபையின் முழு மையான ஆதரவுடன் கோயிற்காரியங்களை திறம்பட நிர்வகித்து வருகின்றனர். புதிய முறையில் அமைந்த நிர்வாகம் கோயிலின் முன்னேற்றத்துக்கு மிக்க பயனுடையதாக இருக்கின்றது.

இன்னும் பல திருப்பணி வேலைகளைச் செய்ய இரு சபையினரும் திட்டமிட்டுள் ளனர். இவை இனிது நிறைவெய்த சைவநன்மக்களின் அன்பும் ஆதரவும் எக்காலமும் இருக்குமென நம்புகின்றோம்.

சுபம்

க. சுந்தரலிங்கம்
ஆலய தருமகர்த்தா

★ ★ ★ ★

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பணித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணபெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

- திருநாவுக்கரசு சுவாமிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஒன்றே கடவுள்

**சிவநெறிச் செல்வர் சுதர்மன்**

பரத கண்டம் எனப்படும் இந்திய நாட்டிலே அநாதிகாலம் முதலாக இன்று வரை இருந்து வருகின்ற சமயநெறி சைவசமயம். இதற்குப் பிரமாணமாக உள்ள முதல் நூல்கள் வேத சிவாகமங்கள். அவை மந்திர திருஷ்டாக்கள் எனப்படும் வேதரிஷிகள் வாயிலாக உலகம் உய்தியடையும் பொருட்டு இறைவன் அருளிச்செய் தவை. வட இந்தியாவில் மொகிஞ்சதாரோ ஹரப்பா என்னும் இடங்களில் புதை பொருள் ஆராய்ச்சி செய்த மேற்புல அறிஞராகிய சேர்ஜோன் மாஷல் என்பவர் பல ஆண்டுகள்செய்த ஆய்வின் முடிபாக ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய மக்கள் அனைவரும் சிவ வழிபாடு உடையவர்களாகவே இருந்தனர் எனக் கூறுகின் றார். இவருடைய சம காலத்தவரான கலாநிதி ப்ராண் நாத் என்னும் பேரறிஞர் கல்வெட்டுக்கள் எனப்படும் சிலாசாசனங்களை (Inscriptiens) ஆராய்ந்து சிவநெறியே புராதன இந்திய மக்களின் சமய நெறி என்ற முடிவுக்கு வந்தார். இவ்வறிஞர்கள் காய்தல் உவத்தலற்றி ஆய்வு செய்து கண்ட உண்மை முடிபுகளை இற்றைவரை எந்த ஆராய்ச்சி வல்லுநரும் மறுத்துக் கூறவில்லை. சிவநெறி இத்தகைய தொன்மை யுடைய தென்பதை உணர்ந்து சைவ மக்கள் அனைவரும் பெருமிதமடையற் பாலதாக இருக்கின்றது.

தமிழ் நாட்டில் பெரும் பான்மையும் உள்ளவை சிவஸ்தலங்கள். இத் திருக் கோயில்களில் உள்ள கர்ப்பக் கிருகத்தில் மூல மூர்த்தியாகச் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. முதற் பிராகாரத்தில் விநாயகர் முருகன் அம்பாள் விஷ்ணு முதலிய மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். வழிபடுவோர் உட் பிராகா ரத்தை வலம் வந்து வணங்குவதிலும் அதனை யடுத்துள்ள வெளிப்பிராகாரத்தை வலம் வந்து வணங்குதல் எல்லாமூர்த்திகளையும் வலம் வந்து வணங்கியதாகும் ஆகை யால் வெளிப்பிராகாரத்தை வலம் வந்து வணங்குவது பல மடங்கு பயன் நல்கும் என்பது சைவ சமய நூல்களின் முடிபு. திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் போன்ற விநாயக ஸ்தலங்களும் திருச்செந்தூர் போன்ற முருகன் கோவில்களும் உண்டு. இவ் வாலயங்களில் கர்ப்பக் கிருகத்தில் மூல மூர்த்தியாக முறையே விநாயகர் முருகன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதைக்காணலாம். திருவேங்கடம் போன்ற விஷ்ணு ஸ்த லங்களில் மூலஸ்தானத்தில் விஷ்ணு மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பர்.

சைவசமயிகள் சிவன் விநாயகர் முருகன் அம்பாள் விஷ்ணு ஆகிய பல மூர்த் திகளைத் தமது கோயில்களில் அமைத்து எல்லாத் தெய்வங்களையும் துவேஷ மனப பான்மையின்றி வழிபட்டுவருகின்றனர். இதனைக் காண்கின்ற பிற சமயத்தவர்கள் முழு முதற் பொருளாகிய ஒரு இறைவனை வணங்காமல் பல தெய்வக் கோட்பாடுடைய வர்கள் சைவ சமயிகள் என இகழ்ந்து கூறுவர். இவ்வாறு கூறுவது சைவசமய சாஸ் திர உண்மைகளைத் தெளிய உணர மாட்டாதாரின் பிதற்றலேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயிகளுள் சிலர் சிவபிரானையும் சிலர் விநாயகரையும் சிலர் முருகப்பிரானையும் சிலர் அம்பாளையும் தத்தம் உபாசனா மூர்த்தியாகக் கொண்டிருப்பர். அவர்கள் அனைவரும் எல்லாத்திருக்கோயில்களுக்கும் சென்று அங்குள்ள மூர்த்திகளை பேதவித்தலின்றி வழிபடுகின்றனர் இன்று எமக்குக் கிடைத்துள்ள தோத்திரப் பாடல்களுள் சமய குரவர் நால்வரும் அருளிய தேவாரம் திருவாசகம் எனப்படும் பக்திப் பனுவல்கள் மிகச் சிறப்புடையவை. இவற்றை அருளிய சிவாநுபூதிமான்களாகிய இவர்கள் தமது பசு கரணங்கள் சிவகரணங்களாக வாய்க்கப்பெற்ற அதீத நிலையில் இத்திருப்பாடல்களை அருளினார்கள் ஆதலால் அவை அருள்வாக்கு எனப்படும். அவை மந்திரசக்தி உடையவை என்றும் அவற்றை பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்தால் இஷ்ட சித்திகளும் பேரின்பப் பேறும் உண்டாகும் என்பது சிவநெறிச் செல்வர்கள் தமது அநுபவத்திற்கண்ட உண்மை.

மூவர் அருளிய இத் தேவாரத் திருப்பாடல்களில் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் பதினொரு பாசுரங்களிலும் முருகப் பிரான் பற்றிய குறிப்புக்கள் நாற்பத்தேழு பாசுரங்களிலும் காணப்படுகின்றன. சமய குரவர்கள் சிவபிரானை உபாசனா மூர்த்தியாகக் கொண்டபோதிலும் அவர்களிடம் சிவம் வேறு, விநாயகர் வேறு, முருகன் வேறு என்ற பேதவித்த எண்ணம் சிறிதும் காணப்படவில்லை. இத்தகைய பேதவித்தலற்ற மாறு பாடற்ற உறுதியான கோட்பாடு ஒவ்வொரு சைவசமயியின் உள்ளத்திலும் இரத்தத்திலும் உயிர்நாடியாக ஒன்றியுள்ளது.

''ஏகம் ஸத்; விப்ரா பகுதாதந்தி'' என்றொரு வேத வாக்கியம் உண்டு. ''எக்காலமும் மாறுபாடற்ற கடவுள் ஒருவரே. ஞானிகள் அக்கடவுளைப் பல நாமங்களால் கூறுவர்'' என்பது அதன் பொருள்.

சைவசமயிகள் ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாத இறைவனைப் பல திருவுருவங்களை அமைத்தும் பல திருநாமங்களால் போற்றிப் புகழ்ந்து பாடி வழிபட்டு வருகின்றனர். இவ்வாறு பண்டு முதல் இன்றுவரை மேற்கொண்டு வரும் வழிபாட்டு முறை மேலே காட்டிய வேதவாக்கியப் பொருளை இனிது விளக்குகின்றது.

முன்னாள் சென்னைப்பல்கலைக்கழகத் தத்துவத்துறைப் பேராசிரியர் கலாநிதி டி. எம். பி. மகாதேவன் என்னும் பேரறிஞர் இந்து சமய தத்துவம் என்னும் நூலில் கூறும் கருத்துக்களைக் கவனிப்போமாக:-

''ஓர் இந்து சமயி விக்கிரகங்களை வழிபடும்போது அவன் முழு முதற்பொருளாகிய இறைவனையே வழிபடுகின்றான். இந்து சமயத்தை விக்கிரக ஆராதனைச் சமயம் என்று வருணிப்பது சரியன்று. பொறி புலன்களால் காணமுடியாத பரமான்மாவின் சின்னங்களே திருவுருவங்கள் என்பது சைவசமய நூல்களின் உறுதியான கோட்பாடு. மந்திரசக்தி கைவந்த அந்தணர்களால் திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அவற்றில் இறைவன் சாந்நித்தியம் ஆன பின்பே சைவசமயிகள் கோயில்களில் அத் திருமேனிகளை வழிபடுகின்றனர். அவர்கள் பல வேறு மூர்த்திகளின் திருவுருவங்களை வழிபடும் போது ஒரே இறைவனை அங்கெல்லாம் கண்டு வழிபடுகின்றனர் இவ்வுண்மையைப் பிற சமயத்தவர்கள் உணர்வதில்லை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் கல்யாணம் மங்களம் சுபம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்று வடமொழி நிகண்டு கூறுகின்றது. இறைவன் மங்கள சொரூபியாய் இருந்து தன்னை மெய்யன்போடு வழிபடும் அடியார்களை முழுமையான மங்களத் தன்மை அடையச் செய்கின்றார். அந்த மங்களத் தன்மையே அந்தமிலின்பத்து அழிவில் வீடு எனப்படும் பேரின்பப்பேறு இறைவன் மங்கள சொரூபியாய் இருப்பதனால் சிவம் என்னும் சொல் இறைவனுடைய திருநாமம் ஆயிற்று,

விநாயகர் என்றால் தனக்கு மேலாக ஒரு நாயகர் (தலைவர்) இல்லாதவர் என்று பொருள். சிவம் வேறு விநாயகர் வேறு என்றால் விநாயகர் என்ற திருநாமம் விநாயகப் பெருமானுக்கு உரியதாகாது. இதனால் இரு மூர்த்திகளின் பேதமின்மையை உணர்க.

முருகப்பெருமானும் சிவமும் ஒன்றே என்பதைக் கந்தபுராணச் செய்யுளொன்று சூரபன்மன் கூற்றாகக் கூறுகின்றது. முருகனைச் சிறுவனென்றும் அவரை எளிதில் வெல்லமுடியுமென்றும் எண்ணிப் போருக்குச் சென்ற சூரபன்மன் முருகப்பிரான் பிரம விஷ்ணுக்களாலும் காணமுடியாத சிவ பரம்பொருளென்பதை உணர்ந்தான்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ

கந்தபுராணம்


சிவமும் சக்தியும் வேறல்லர் என்பது சமயநூல் முடிபு சக்தி, உமை அம்பாள் சரஸ்வதி இலக்குமி துர்க்கை முதலிய திருநாமங்கள் ஒரே உமையம்மைக்கு உரியன. கலைச்செல்வி எனும்போது சரஸ்வதி என்னும், பொருட்செல்வத்தைக் கொடுப்பவர் எனும் போது இலக்குமிதேவி என்றும், உடலுறுதியும் வீரமும் தருபவர் எனும்போது துர்க்கை என்றும், பரஞானமாகிய பேரின்பம் நல்குவர் எனும்போது பராசக்தி என்றும் கூறுவது சைவசமய மரபு. சிவமும் சக்தியும் சூரியனும் அதன் ஒளிக்கிரணங்களும் போலப் பிரிப்பின்றி நிற்பர் என்பது வேத சிவாகமங்களின் முடிபு.

இதுகாறும் கூறியவாற்றால் ஒன்றே கடவுள் என்பதனை ஓரளவில் விளக்க முயன்றோம். இவற்றின் விரிவுகளை வேத சிவாகமங்களிலும் மற்றைய சைவ சமய நூல்களிலும் கண்டு தெளிக.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| 1. | **யானை முகம்:** | ஓம் என்னும் பிரணவ வடிவிலுள்ளது. |
| 2. | **அங்குசம்:** | மதயானையை அடக்கும் ஆயுதம் ஆணவம் மிக்க ஆன்மாக்களை அடக்குபவர். |
| 3. | **பாசம்:** | உயிர்களைக் கட்டிக்காப்பவர். |
| 4. | **தந்தம் அபயம்:** | தியாகத்தின் சின்னம் அடியார்களை காத்தருளல். |
| 5. | **வரதம்:** | உயிர்களுக்கு அனுக்கிரகம் செய்பவர். |
| 6. | **மோதகம்:** | பஞ்ச பூதங்களின் வடிவிலான உலகத்திற்கு தாமே ஆதாரம் என உணர்த்தி நிற்றல். |
| 7. | **பருத்த தொந்தி:** | பிரபஞ்சம் முழுவதும் தனக்குள் அடக்கம். |
| 8. | **எலி வாகனம்:** | ஞானம் பெற்ற ஆன்மாக்களை தாமே ஆட்கொள்பவர் என்னும் தத்துவம். பெரிதுக்குப் பெரிதாகவும் சிறிய தற்குச் சிறிதாகவும் விளங்கும் தனிப்பெருந்தன்மை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# திருவுருவ அமைப்பும் அதன் சிற்பியும்

திரு. க. கௌரி காந்தன்

இடையூறுகளை அகற்றி சீவராசிகளைக் காத்து நற்பேறுகளை நல்க விநாயகப் பெருமான் பல அம்சங்களோடு காட்சி தருகின்றார். பஞ்சமுக விநாயகரின் அம்சங்களில் ஏரம்ப விநாயகர் துண்டி விநாயகர் என்பனவும் அமையும். ஏரம்ப விநாயகர் சிங்க வாகனத்தில் அமர்ந்து காட்சி தருவார். இவ்விநாயகப் பிரதிஷ்டை மிக அருமையாக உள்ளது.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் இந்திய நாட்டின் பிற இடங்களிலும் துண்டி விநாயகரின் திருவுருவங்கள் பல ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மருதடி விநாயகர் ஆலயத்திலும் துண்டி விநாயகரின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவ் விக்கிரகத்தில் விநாயகப் பெருமான் வலஞ்சுழியாகப் பஞ்ச பூதங்களின் வடிவிலான உலகத்துக்குத் தாமே ஆதாரம் என்பதை உணர்த்தி மோதகத்தைக் கையிலேந்தி உள்ளார். இது ஒரு தனிச்சிறப்பாகும். இவ் விக்கிரகம் பதின் மூன்றே அரைக்கால் தேவாங்குலம் கொண்டது. அடியார்களைப் பக்தி பரவசப் படுத்தும் நிறைவான தோற்றம்கொண்ட இந்த அமைப்பு சாந்த சொரூபம் எனப் படும்.

தென்னிந்தியாவில் இராமநாதபுரம் ஜில்லாவில் நயினர் கோவில் நாகநாத சுவாமி தேவஸ்தான ஸ்தபதி பரம்பரையில் பிறந்து தெய்வ கைங்கர்யங்களில் ஈடுபடும் நோக்குடன் இலங்கையில் யாழ்ப்பாண நகரை அடுத்துள்ள கோண்டாவில் என்னும் இடத்தில் ஸ்ரீ நாகலிங்க ஸ்தபதி வாழ்ந்து வந்தார். இவர் தேவ சிற்பி விசுவகர்மா ஸ்தபதிகளின் வழித் தோன்றல். இப் பெரியார் ஆங்கிலஆண்டு 1959 வரை இலங்கையில் வாழ்ந்துதெய்வ கைங்கர்யங்களில் பலவற்றை நிறைவுறச்செய்தார். சில விக்கிரகங்களை அமைப்பதில் இவர் வெகு சமர்த்தர். ஸ்ரீ சோமசுந்தர ஸ்தபதியும் ஸ்ரீ தங்கவேலு ஸ்தபதியும் இவருடைய இரு புத்திரர் ஆவர். தங்கவேலு ஸ்தபதியை தங்கவேலு ஆசாரி எனவும் அழைப்பர். இவர் இலங்கையின் பல இடங்களிலுள்ள திருக்கோவில்கள் பலவற்றை நிர்மாணித்த பெருமை உடையவர். இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனடி சேர்ந்துவிட்டார். இப்போது நம்மத்தியிலிருப்பவர் ஸ்ரீ சோமசுந்தர ஸ்தபதி என்பவரேயாம்.

விசுவகர்மா பரம்பரையின் வழிவந்த ஸ்தபதிகளின் இலட்சணங்களைச் சிற்ப சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. விசுவகர்மியம் என்னும் நூலின் பன்னிரண்டாம் அத்தியாயத்தில் ஸ்தபதிகளின் இலட்சணம் பின்வருமாறு காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்தபதிகள் ஒவ்வொரு சாதனங்களுள் பிரவேசிக்கும் போதும் தேவ பிம்பங்களின் உறுப்புக்களை அமைக்க ஆரம்பிக்கும் போதும் சதுர் வேதங்களின் அவ்வவ் வகைக்குரிய சூத்திரம் அருவாகம் பனசை பிரஸ்னம் முதலிய மகாமந்திரங்களை அத்தியாயனம் பண்ணிச் செய்ய வேண்டும். ஆகையால் ஆதியில் பிரவர்த்தித்த விசுவகர்மி வம்சத்தவர்களே எல்லாக் காரியங்களையும் செய்ய முற்பட வேண்டும்" என்றும் அந்நூல் வற்புறுத்திக் கூறுகிறது.

ஸ்தபதிக்குரிய சகல அம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர் ஸ்ரீ நா. சோமசுந்தர ஸ்தபதி ஆவர். வெட்டுளி நாதத்துடன் சுலோகங்களின் ஒலியும் இரண்டறக் கலந்த நாதவெள்ளத்தில் அவரது தொழிலகம் செயற்படுவதைக் காண்பது கிடைத்தற்கரிய காட்சி.

இவர் உருவாக்கிய பஞ்சமுக விநாயகர் திருவுருவங்கள் ஆறு திருக்கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இணுவில் பரராசசேகரப் பிள்ளையார், இணுவில் பருத்திப் பிள்ளையார், புங்குடுதீவு மேற்கு வீரகத்திப் பிள்ளையார், தாவடிவேத விநாயகர், தெல்லிப்பளை காசி விநாயகர், மானிப்பாய் மருதடி விநாயகர் என்பன அவை.

மருதடி விநாயகர் ஆலய முன்றிலில் குரோதன வருடம் தை மாசம் 30ந் திகதி சதுர்த்தி திதியில் பஞ்சமுக விநாயகர் திருவுருவம் அமைக்க கால்கோள்விழா நடைபெற்றது. பக்தர்கள் திருவுருவம் அமைக்கக் காணிக்கையாகக் கொடுத்த தங்கம் வெள்ளிகள் முழுவதையும் உட்படப் பஞ்சலோகச் சேர்வை கருவாக்கப்பட்டது. அப்போது மழைக் காலத்தை அடுத்துள்ள காலமாதலால் கோயிற் பிரகாரங்களில் நீர்த் தன்மை இருந்தது. அதில் கருவாக்கப்பட்ட பஞ்சலோகங்கள் திருப்திகரமாக அமையவில்லை. ஸ்தபதியாருக்கும் தருமகர்த்தா சபையினருக்கும் கரு அமைப்பு திருப்தி அளிக்கவில்லை. சிற்பசாஸ்திரங்களின் கோட்பாடுகளுக்கு ஏற்பக் கரு அமைப்பு திருப்தியாக அமையும் வரை முயற்சி செய்து அக்ஷய வருஷம் ஆனிமாதம் ஏகாதாசித் திதியும் விசாக நட்சத்திரமும் கூடிய சுப முகூர்த்தத்தில் ஸ்தபதியாரின் சூழலில் இப்போது நிறைவெய்திய பஞ்சமுக விநாயகர் திருவுருவத்துக்கு வேண்டிய கரு முன்பு திருப்தியளிக்காத லோகங்கள் முழுவதையும் மீண்டும் உருக்கி அமைக்கப் பெற்றது. மருதடி விநாயகர் கோயில் நிர்வாக முக்கியப்பிரமுகர்கள் அனைவரும் அன்று உதய காலம் முதலாக உருக்கிக் கரு அமைத்து முடியும்வரை அங்கே கூடியிருந்தார்கள். கிரமந்தவறாது தேவ உறுப்புக்கள் முன்னைய ஒழுங்கிலேயே வார்ப்பு உலோகம் கருவாக்கப்பட்டது.

அன்று முதல் நமது ஸ்தபதியார் இத்திருவுருவம் அமைப்பதிலே முழு நேரத்தையும் போக்கினர். அவரது சிற்ப சாமர்த்தியத்தில் உருவாகிய திருவுருவத்துக்கு அவருடைய குமாரன் ஸ்ரீ கெங்காதரஸ்தபதி அலங்கார வேலைகளையும் மெருகு ஊட்டுதலையும் திறம்படச் செய்து முடித்தார்.

எல்லாச்சிற்ப சாஸ்திர இலக்கணங்களும் ஒருங்கே சிறப்புடன் அமைந்த பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் இவ்வாண்டு தைமாசம் 18ந் திகதி (31-1-87) மங்கள இசையுடன் தொண்டர்களால் ஊர்வலமாக ஸ்தபதியின் இல்லத்திலிருந்துமருதடி விநாயகர் ஆலயத்துக்குக் கொண்டுவர திருவருள் பாலித்தது.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதிர் யாகம்

## வேதவியாசர்

மநுதர்ம சாஸ்திரம் மூன்றும் அத்தியாயத்தில் இல்வாழ்வானுக்கு ஐம்பெரும் வேள்விகள் விதிக்கப்பட்டுள்ளன. வேள்வி எனினும் யாகம் என்னும் ஒக்கும். அவை பிரமயாகம், தேவயாகம், மாநுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம், என்பன். பிரமயாகம் வேதம் ஓதுதல், தேவயாகம் ஓமம் வளர்த்து அக்நி பூசை செய்தல், மாநுடயாகம் விருந்தினரை நியமப்படி உபசரித்தல், பிதிர் யாகம் இறந்துபோன தந்தை தாயார் நற்கதியடையும் பொருட்டுப் பிண்டதர்ப்பணம் முதலாயின செய்தல், பூதயாகம் உணவருந்தமுன்பு காக்கைக்கு உணவு கொடுத்தல் போன்றவை.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை.

என்னும் குறட்பாவில் தென்புலத்தார் என்பது பிதிர் யாகத்தைக் கூறிற்று இஃது இறந்தவருடைய புத்திரராதியாரால் இறந்தவரும் அவரினத்தவரும் நற்கதி அடையும் பொருட்டுச் செய்யப்படுவது.

தென்புலத்தார் என்பதற்குப் பதவுரையில் பிதிரர் எனக்கூறி, விளக்கவுரையில் பிதிராவார் யாவர் என்பதையும் தெளியக் கூறுகின்றார் பரிமேலழகர்.

பிதிராவார் படைப்புக் காலத்து அயனால் (பிரமாவால்) படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி; அவர்க்கிடம் தென்திசையாகலின் தென்புலத்தார் என்றார். இது பரிமேலழகர் கூறிய விளக்கவுரை.

இவ்வுரையால் பிதிரர் என்பது இறந்த முன்னோரையும் அவரது இனத்தவரையும் உணர்த்தவில்லை என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும்.

ஒவ்வொரு சைவ சமயியும் தனது தந்தை தாயார் இறந்த மாசத்தில் அவ்வத்திதிகள் கூடும் தினங்களில் பிதிர்க்கடன் செய்கின்றனர். அந்நாட்களில் நல்லொழுக்கம் உடைய அந்தணர்களுக்கு பிதிர் யாகத்துக்கு விதிக்கப்பட்ட மந்திரக்கிரியைகளுடன் அரிசி காய்கறி தேங்காய் பழங்கள் புதிய வஸ்திரம் தக்ஷிணை என்பன கொடுத்துப் பிண்ட தர்ப்பணம் செய்கின்றன்.

இவ்வாறு இறந்துபோன முன்னோர்கள் நற்கதியடையும் பொருட்டுப் பிராமணர்கள் பிரீதி செய்யப்படுகின்றனர் அவர்கள் பிரீதியடைய தென்திசையிலுள்ள பிதிரர் என்னும் கடவுட் சாதியினர் பிரீதியடைகின்றனர். அவர்கள் பிரீதியடைய இறந்துபோன தந்தை தாயரும் அவர்களின் உறவினரும் நற்கதி அடைகின்றார்கள். இவ்வாறு வேதநூல்கள் கூறுகின்றன. இதனைக் கூறுகின்ற வேதசாஸ்திரங்களை உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்ற நம்பிக்கையுடன் பிதிர்யாகம் செய்யப்படுகின்றது. பிதிர்யாகம் வடமொழிப் பதமாயினும் அதற்குச் சிராத்தம் என்றும் வேருேர் வடமொழிப் பெயரும் உண்டு சிராத்தம் என்பதற்குச் சிரத்தையோடு செய்யப்படுவது என்று பொருள். சிரத்தை நம்பிக்கை என்பன ஒரு பொருட் சொற்கள்.

'விப்ர முகா; பிதர; என்ருெரு வாக்கியம் வைதிக சம்பிரதாயத்தில் உண்டு. விப்ர;- பிராமணன்; முக;- வாய்; பிதா:- பிதிரர்கள். பிராமணே வாயாக உடைய வர்கள் பிதிரர்கள் என்பது அந்த வாக்கியத்தின் பொருள்.

பிராமணப் பிரீதியால் பிதிரர் பிரீதியடைய, பிதிரர் பிரீதியால் இறந்த முன் ஞேர் நற்கதியடைகின்றனர். இதுவே பிதிர் யாகத்தின் தத்துவம். எத்தகைய அந் தணர்கள் பிதிர்யாகத்தின்போது பிரீதி செய்யப்படத் தகுதியுடையவர் என்பதனை ஆறுமுகநாவலர் எழுதிய நான்காம் பால பாடத்தில் சிரார்த்தம் என்ற தலையங்கத்தை யுடைய கட்டுரையை வாசித்து அறிக.

சுபம்.

---

உ
கணபதிதுணை

## மருதடி விநாயகர் ஸ்துதி

இராகம்:- நாட்டை தாளம்:- ஆதி

### பல்லவி

கஜமுக கணபதியே - சரணம்
நினதடி நம்பினேன் நிர்மலனே அருள்வாய்
(கஜமுக)

### அனு பல்லவி

தமியேனை ஆண்டருள் தந்திமுகத் தேவா
அமிழ்தான தமிழ்பாட ஆனந்த மாய்வரும்
(கஜமுக)

### சரணம்

அம்போருகாமுக லம்போதரா அருள்வாய்
சம்போ மஹாதேவன் சாம்பவியின் புதல்வா
வெம்பாப வினை தீர்க்கும் வேழ முகத்தவனே
நம்பாலிரங்கும் நல்வி நாயகா மருதடி
(கஜமுக)

கவிமாமணி
சாகித்ய சிரோன்மணி
வீரமணி ஐயர்

University of Jaffna
P3421
Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதியின் 16 தோற்றங்கள்


பால கணபதி


உச்சிஷ்ட கணபதி


சக்தி கணபதி


த்விஜ கணபதி


வீர கணபதி


நிருத்த கணபதி


தருண கணபதி


க்ஷிப்ர கணபதி


பக்த கணபதி


லக்ஷ்மி கணபதி


ஸித்தி கணபதி


புவனேச கணபதி


ஹேரம்ப கணபதி


மஹா கணபதி


விஜய கணபதி


ஊர்த்வ கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donate ...
Mr ... ULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org